பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 வைகாசி 15 ஜ. ஆகிர்: 9 இதழ்: 106
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 28-5-77

# திருமலை - கொழும்பு பஸ்: வழிமறித்துக் கொள்ளை

கொழும்பு, வெள்ளி

திருகோணமலையில் இருந்து கொழும்புநோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பஸ் ஒன்று வழிமறிக்கப்பட்டு பிரயாணிகளிடமும், கண்டக்டரிடமும் இருந்து 38,558 ரூபா 56 சதம் கொள்ளையடிக்கப்பட்டது.

இத்துணிகரச்சம்பவம் இனமொறுவ என்ற இடத்தில் நடைபெற்றது.


சம்பவதினத்தன்று மேற்படி பஸ் வீதியின் குறுக்கே நிறுத்தப்பட்ட கார் ஒன்றினல் வழிமறிக்கப்பட்டதாம்,

பஸ்ஸை வழிமறித்தகோஷ்டி பிரயாணிகளிடமும், கண்டக்டர்களிடமுமிருந்து கைக்கடிகாரங்களையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றது.

**கார் பிடிபட்டது**

கலேவெவ என்ற இடத்தில் பின்னர் மேற்படி 5 ஸ்ரீ கார் அனதரவாகக் கிடக்கக் காணப்பட்டது.

இக் கார் முகத்துவாரத்தில் தேடப்பட்டகாராக இருக்கலாமென பொலிசார் கருதுகின்றனர். (உ)

துரையப்பா கொலைவழக்கின் எதிரிகள் நேற்று யாழ். மேல்நீதிமன்றத்திற்கு வந்தபோது நீதிமன்றத்தில் முன்னாள் உடுவில் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கத்துடனும் இளைஞர்களுடனும் காணப்படுவதை முதலாவது படத்திலும், பிணையில் விடுதலை செய்யப்பட்டபின்னர் தந்தை செல்வாவின் சமாதிக்குச் சென்று மலர் தூவி அஞ்சலி செலுத்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம். வங்கிக் கொள்ளைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள இன்பமும் அவர்களுடன் காணப்படுகிறார். படம்: 'தேவா'

## துரையப்பா கொலை வழக்கு:

# 5 இளைஞர்களும் தலா ரூ. 5000 பிணையில் செல்ல அனுமதி!

## கொழும்பு மேல் நீதி மன்றத்தில் ஜூன் 14-ல் ஆஜராக உத்தரவு

— கா. யோகநாதன் —

யாழ்ப்பாணம், சனி

துரையப்பா கொலைவழக்கு கொழும்பிற்கு மாற்றப்பட்டு, எதிரிகள் ஐவரையும் தலா 5000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதித்து ஜூன் மாதம் 14-ம் தேதி கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜராகும்படி, யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஜனப் எம். எம். அப்துல்காதர் நேற்று உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் 5 எதிரிகளான பாலசுப்பிரமணியம் கலாபதி, விஞ்சித்தம்பி ஆறுமுகம்கிருபாகரன், சபாநாயகம் லோகநாதன், வைத்திலிங்கம் லோகநாதன், தம்பிப்பிள்ளை சந்ததியார் ஆகியோர் நேற்றுக்காலை யாழ் மேல்நீதிமன்றத்தில் ஆஜரானர்கள்.

### 119 சாட்சிகள்

### 35 காட்சிப் பொருட்கள்

தங்கள் வழக்கறிஞர்களுடன் நேற்றுக்காலை 8-30 மணிக்கு நீதிமன்றத்தை வந்தடைந்தனர். நீதிமன்றத்திற்கு வெளியில் ஏராளமான இளைஞர்கள் திரண்டிருந்தனர்.

எதிரிகள் ஐவரும் வழக்கறிஞர்கள் நின்றுகொண்டிருந்தனர். நீதிமன்ற உத்தியோகத்தர்களும், விசாரணையைப் பார்க்க வந்திருந்தனர்.

காலை 9 மணிக்கு நீதிமன்றம் ஆரம்பமானது, முதலில் கார் கொள்ளை வழக்குவிசாரணைக்கு ஞர்களுக்கு அருகிலுள்ள ஆசனத்தின் முன்வரிசையில்அமர்ந்திருந்தனர். நீதிமன்றத்திற்கு உள்ளேயும், பெருந்திரளான இளைஞர்கள் கூடியிருந்தனர் ஒருபக்கத்தில் பெண்களும் அமர்ந்திருந்தனர். வழக்கறிஞர் ஆசனங்கள் இடவசதியில்லாததினல் பலவழக்கறி எடுக்கப்பட்டது. சட்டப்பிரச்சினைபற்றிப் பேசவிருப்பதால் முதலில் துரையப்பா கொலைவழக்கை எடுக்குமாறு சட்டத்தரணி வி. என். நவரத்தினம் நீதிபதியிடம் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து துரையப்பா கொலைவழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**எதிரிகள் ஆஜர்**

துரையப்பா கொலைவழக்கில் எதிரிகள் ஐவரின் பெயர்களும் கூப்பிடப்பட்டதும், அவர்கள் வரிசையாக கூண்டில் போய் நின்றனர்கள். அவர்களுக்கு குற்றச்சாட்டுப் பத்திரமும், வாக்குமூலப் பத்திரங்களும் தனித்தனியாக வழங்கப்பட்டன.

பின்னர் அவற்றை சட்டத்தரணிகள் பெற்றுக்கொண்டதும், சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் அவற்றைப் பார்த்துவிட்டு ட்ரயல் அட்பாரில் 2 கட்டுகள் கொடுக்கப்பட்டதாகவும், இது பாரமற்றிருப்பதாகவும் சிரித்தபடி கூறினர்.

**சட்டத்தரணிகள்**

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் சட்டத்தரணி எஸ். கதிரவேலுப்பிள்ளை, சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன், சட்டத்தரணி கே. துரைரத்தினம், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தின் உதவியுடன் ஆஜரானர்கள்.

2-ம் எதிரிசார்பில் சட்டத்தரணி, எஸ். தம்பித்துரை வி. பொன்னையா, சட்டத்தரணி சி. நாகராசா, சட்டத்தரணி ஆர். விஸ்வ

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நீதிமன்றம் கொண்டுவர மனு!

யாழ்ப்பாணம், சனி

கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு மாற்றப்பட்டால் அதனை ஆட்சேபித்து மீண்டும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்திற்கு கொண்டுவர உயர் நீதிமன்றத்தில் நாம் மனுத்தாக்கல் செய்வோம்''

துரையப்பா கொலை வழக்கு நேற்றி யாழ் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டத்தரணி எம், சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தமது வாதத்தில் தெரிவித்தார்.

வழக்கு மீண்டும் இந்நீதிமன்றத்திற்கு வரும்போது விளக்கமே இல்லாமல் போய் விடலாம் என்றும் நிறம் மாறி விடும். என்றும் திரு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

இவ்வழக்கு விசாரணை இங்கு நடந்தால், பொலிஸார் எப்படி நடந்துகொண்டார்கள் என்பது அம்பலத்திற்கு வருவதுடன், உலகம் அறியாத பல விஷயங்கள் வெளிவரும் என்றும் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் கூறினர்,

திரு. சிவசிதம்பரம் தொடர்

(7-ம் பக்கம் பார்க்க)

# திருமண அழைப்பு

மணமகன்:
செல்வன். ந. மெய்நெறிகண்ட தேவன்
(Engineer, U. K.)

மணமகள்:
செல்வி. ப. உலகேஸ்வரி

இடம்: நல்லூர் சிவன்கோவில்.
திகதி: பிங்கள ஆடு வைகாசி மாதம் 19-ம் நாள் புதன்கிழமை [1-6-1977]
காலம்: மாலே 6 மணிமுதல் 7 மணி வரை.

உறவினர்களேயும், நண்பர்களேயும் வருகை தந்து மணமக்களே ஆசிர்வதித்தேகுமாறு பணிவன்புடன் வேண்டுகின்ருேம்.

திரு. இ. நடராசா
(இளேப்பாறிய ஆசிரியர்)

திருமதி நடராசா
(மணமகனின் பெற்ருேர்)
செம்பியன் லேன்,
கொக்குவில்.

பொ. பரமசிவம்
தம்பதிகள்
(மணமகளின் பெற்ருேர்)
C. K. சண்முகநாதன்.
K. இராமநாதன்.
(மணமகளின் மாமன்மார்)
184, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

6252

1-6-1977 முதல்

## விலே குறைப்பு

செல்லம்ஸ் ஸ்ருடியோ,
94—96, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலேபேசி: 436.

| அளவு | பிரதிகள் | பழைய சலார் | புதிய சலார் |
|---|---|---|---|
| 12''×10'' | 2 | ரூபா 110-00 | ரூபா 100-00 |
| 6½''×4¾'' | 2 | ரூபா 33-00 | ரூபா 30-00 |
| 3½''×5½'' | 3 | ரூபா 15-00 | ரூபா 13-50 |
| 2½''×3½'' | 3 | ரூபா 7-50 | ரூபா 7-00 |

6291

## Alliance Francaise de Jaffna

பிரான்சு நாட்டு ஆசிரியர்களால் பிரான்சிய மொழி வகுப்புக்கள் நவீன முறைகளினுல் நடாத்தப்படும்.

விபரங்களுக்கு:-
130, 1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

மை நாட்களில் 2 மணிக்கும் 7 மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ளவும்.

6280

## விலே குறைப்பு

எங்கள் நாட்டில் ரூபாவின் மறு மதிப்பீடு காரணமாக

மில்க்வைற் தயாரிப்பின்
விலே குறைப்பு விபரம்

★ நீமியா உரம்

மண்ணே வளப்படுத்தி அதிக விளேவைத் தந்து பயிர்களேப் பாதுகாக்கச் சிறந்தது.

பழைய விலே — புதிய விலே
1 இருத்தல் பைக்கட்
70 சதம் — 65 சதம்

மில்க்வைற்சவர்க்காரத்தொழிலகம்,
யாழ்ப்பாணம். தொலேபேசி: 7233.
கிளே:
79, மெசன்சர் வீதி, கொழும்பு-12.
தொலேபேசி: 36063.

6285

PATRICIAN INDUSTRIAL ENTERPRISE

Opportunity to obtain jobs overseas
Welding courses, both Electrical and Gas

A complete course in all types of Welding.
Period one year.
Trained by competant and fully qualified Engineer and Welder.
Limited vacancies.

Apply to: Registrar,
Patritcian Industrial Enterprise,
No. 59, St. Patrick's Road,
Jaffna.

Office open from: 8-00 A. M. to 8-00 P.M. on weekdays and 8-00 A. M. to 6-00 P. M. on Saturdays.

6287

## மேலும் 11 புதிய கிராமசேவகர்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலும் 11 புதிய கிராமசேவை உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி வகுப்பு தற்போது யாழ்ப்பாணம் செயலகத்தில் நடைபெற்றுவருகிறது.

தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமசேவகர்களின் விபரம் வருமாறு:-

க. வைத்தியநாதர் – கோப்பாய், ந. இராஜரத்தினம் மட்டுவில்தெற்கு, கு. பற்குணராசா-சாவகச்சேரி, வே. வன்னியசிங்கம் பரந்தன், ஆ. த. பேரின்பசிவம் பூநகரி, க. ஸ்ரீகரன் நல்லூர், கா. சி. மகேந்திரராசா உடுப்பிட்டி, க. வேலாயுதபிள்ளே மல்லாகம், செ. வைத்தியநாதர் சுன்னுகம், இ. சேதுராசா நல்லூர், ச. க. காசிலிங்கம் அனலேதீவு.

ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட 12 பேருக்கும் நியமனம் வழங்கப்பட்டுவிட்டது. (ஆ)

## இன்று வருகின்றனர்

கொழும்பு, சனி

கடந்த ஐந்து மாதங்களாக மலேஷியா, பினங், ஈப்போ, சிங்கப்பூர் முதலிய நாடுகளில் வில்லிசை சுற்றுலா நிகழ்த்திய யாழ். கலாக்ஷேத்திர வில்லிசை மன்னன் கே. என். கணபதிப்பிள்ளே (சின்னமணி) தமது குழுவுடன் இன்று சனிக்கிழமை இலங்கை திரும்புகிருர். கலாக்ஷேத்திர அதிபர் கீதாஞ்சலி வி. கே. நல்லேயாவும் மற்றும் ரசிகர்களும் கட்டுநாயக்கா விமான நிலேயத்தில் இன்று அவர்களே வரவேற்பர். (அ)

## அரசாங்க ஊழியர் நிலேமை

யாழ்ப்பாணம், வெள்ளி

தேர்தலில் போட்டியிடும் அரசாங்க ஊழியர்கள் அரசியல் அந்தஸ்து உடையவராகவும் மாதாந்த வருமானம் 570 ரூபாவுக்கு குறைந்தவராயும் இருந்தால், கட்டுப்பணத்தை இழந்தாலும் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவாரென, அரசாங்கப்பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை கூறுகின்றது.

அண்மையில் எமது பத்திரிகையின் அரசாங்க ஊழியர்கள் கட்டுப்பணத்தை இழந்தால் வேலேபறிபோகும் என்ற செய்தி தவறுனது, குறிப்பிடப்பட்ட வருமானத்துக்கு கூடிய அரச ஊழியர்கள் தமது பதவியை ராஜினுமா செய்தே போட்டியிடலாம், மற்றவர்களுக்கு, மூன்று மாதசம்பள மற்ற விடுமுறையுடன் மீண்டும் வேலேக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர். (செ)

## கூட்டுறவுக் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

இவ்வருடம் ஜூலேமாதம் கொண்டாடப்படவிருக்கும் 55வது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி கூட்டுறவு அங்கத்துவகல்விஆண்டாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளே யாழ். கூட்டுறவு அபிவிருத்தி ஆணேயாளர் திரு. ஜெயகாந்தன் செய்துவருகிருர்.

இவ்விழாவையொட்டி கட்டுரைப் போட்டியொன்றும் நடாத்தப்படவிருக்கிறது. இப்போட்டி கூட்டுறவு ஊழியர்கள், கூட்டுறவு அங்கத்தவர்கள், பாடசாலே மாணவர்கள் என மூன்று பிரிவாக இடம் பெறும். இப்போட்டிக்கான நிபந்தனே சுற்றுநிருபங்களே சகல பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கும் எஸ். ஜெயகாந்தன் அனுப்பிவைத்துள்ளார். (கு-அ)

## தசாக அழைப்பு

### சி. விசாலாட்சி அம்மாள்

இம்மாதம் 6-ந் திகதி (19-5-77) அன்று காலமான உடுவில் ஸ்ரீ மீனுட்சி சோமசுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தான சொந்தக்காரரும் பிரதம குருவுமான அமரர் பிரமஸ்ரீ ச. சிவகடாட்சக்குருக்கள் அவர்களின் பிரிய பத்தினி சி. விசாலாட்சி அம்மாள் அவர்களின் தசாகக்கிரியைகள் இம்மாதம் 15-ந் திகதி (28-5-77) சனிக்கிழமை பகல் 11 மணிக்கு மேற்படி தேவஸ்தானத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். சி. முத்துச்சாமி சர்மா, சி. பாலசுப்பிரமணிய சர்மா. 6292

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

15-6-77-ந் திகதி தொடக்கம் 31-12-77-ந் திகதி வரையிலான காலத்திற்கு பெரிய கடைக் காலேக்கான குத்தகைக் கேள்வி மாநகராட்சி மன்ற ஆணேயாளரால் 7-6-77-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் 3-6-77-ந் திகதி வெள்ளிக்கிழமை 3-00 மணி வரையும் அதற்குரிய பிணேப்பணமாக ரூபா 100/-ம் பத்திரக்கட்டணமாக ரூபா 100/ யும் செலுத்தியதன் பேரில் வழங்கப்படும்.

இது விடயமாக இதர தகவல்களே பெற விரும்புவோர் அவற்றை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. சிவஞானம்,
யாழ். மாநகர ஆணேயாளர்.
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
25-5-77. 6302

## கேள்வி விளம்பரம்

### புலோப்பளேக் கிராம சபை பளே மல்வில் முகாவில் ரேட்டு வேலே

மேற்படிவேலேக்கு சீல்வைத்த கேள்விகள் என்னுல் 1977ம் ஆண்டு ஆனி மாதம் 8ம் திகதி புதன்கிழமை காலே 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 15/-ம் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 100/-ம் செலுத்தி ஆனி மாதம் 2-ம் திகதி தொடக்கம் 7-ம் திகதி வரை கேள்விப்பத்திரம் சபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் பதிவுத் தபால் மூலம் ஒரு பிரதி எனக்கும் ஒரு பிரதி பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணேயாளருக்கும் அனுப்பவேண்டும். மேற்கொண்டும் விபரங்கள் எனது காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. மு. நாகமுத்து
ஜே. பி.,
தலேவர்,
புலோப்பளேக் கிராம சபை,
பளே.

புலோப்பளேக் கிராம சபை,
பளே. 25-05-77 6289

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வரி விளம்பரம்

### விற்பனேக்கு

திறம் திண்டுக்கல் 6 அடி 8 அங். உயரமான இரும்புப் பெட்டி (Iron safe) உடன் விற்பனேக்கு உண்டு. 2 இலாச்சிகளேயும் 2 கதவுகளேயும் உள்ளடக்கியது வெளியே 2 கைப் பூட்டுகளுண்டு. நல்ல நிலே, அழகிய தோற்றம், மயிலிட்டி வடக்கிலுள்ள ''யோகவாசம்'' எனும் திரு. செ. சின்னத்தம்பி அவர்களின் இல்லத்தில் பார்வையிடலாம். 6278

யாழ்ப்பாணம் பிரதான வீதி 114-ம்இலக்கமுடைய நாலரை பரப்பு காணியில் சகல வசதிகளுடன் அமைந்துள்ள வீடு உடன்விற்பனேக்கு இருக்கிறது. விபரங்களுக்கு: B. G. S. டேவிட், 677, அலுத்மாவத்த ரோட், கொழும்பு-15. 6281

PERCIVAL HALL
Chapel Street, Jaffna.
Nov. 77 Examinations.

1. Foundation Stage Section B & Professional Stage I
   Applications Close 3-6-77.
   Enrolment 6-6-77.
2. Classes for Foundation Section A & Chartered Preliminary. — Started

6300

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

சர்வோதயப் பாதையில் கிராம அபிவிருத்தி, தனிமனித வளர்ச்சி, மக்கள்சேவையாளர்கள் பயிற்சி ஆகியன பற்றிய கருத்தரங்கு ஒன்று புங்குடுதீவு சர்வோதயக்கல்வி அபிவிருத்தி நிலேயத்தில் திரு. கனகசபை தலேமையில் இன்று ஆரம்பமாகும். இக்கருத்தரங்கு 31ந்திகதி வரை நடைபெறும். இக்கருத்தரங்கில் கிராம [illegible] களோடு தொடர்புடைய அரசாங்க உத்தியோகத்தர்களும் சனசமூகநிலேயங்கள் அபிவிருத்தி சங்கங்கள் மாதர்சங்கங்கள், மதஸ்தாபனங்கள், பல்கலேக்கழகம், ஆசிரியபயிற்சி கலாசாலேகள், உயர்தரக்கல்லூரிகள், பொதுநலமன்றங்கள் ஆகியவைகளிலிருந்து 60 பிரதிநிதிகளும் கலந்துகொள்கிருர்கள். (க)

## கொள்ளே!

மன்னுர், வியாழன்

மன்னுர் பொலிஸ் பகுதியில் துணிகரக கார்க் கொள்ளேச் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

சம்பவதினமிரவு 10-15 மணியளவில் ஒரு கோஷ்டியினர் பெரியகுளம் என்ற இடத்திற்குச் செல்லவேண்டும் எனக் கூறி உப்புக்குளத்தில் இருந்து வாடகைக்கு கார் ஒன்றை அமர்த்தினராம்.

கார் விரைந்துகொண்டிருக்கையில் வழியில் சாரதி நாகூர் இவர்களால், மிரட்டி இறக்கப்பட்டாராம்.

காரைக் கொள்ளேயடித்துக் கொண்டு இவர்கள் இருளோடு இருளாக மறைந்துவிட்டனராம்.

இந்த பழைய ஆஸ்ரின் காரையும், சந்தேகநபர்களேயும் பொலிஸார் தேடிவருகின்றனர். [உ]

## சத்தியத்தில்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யெல்லாம் தவிக்கவிட்டு இன்று அவரது இலட்சியங்களே கட்டிக்காக்க ஒரு தேர்தல் எம்மை எதிர்நோக்குகின்றது. அதை வென்று, நமது வெற்றி வரலாற்றை அகில உலகிற்கும் உணர்த்துவதே இன்று அவருக்கு நாம் செய்யும் இறுதி அஞ்சலியாகும்' என்ருர்.

திருவாளர்கள் ஐயா சச்சிதானந்தம், எஸ். கே. மகேந்திரன், யேம்ஸ். இ. மாணிக்கம் உட்பட பலர் உரையாற்றினர். (செ)

### வாட்டர்கேட் ஊழலில்

# அவசரப்பட்டு ராஜினுமா செய்து பயனற்ற வாழ்வு வாழ்கிறேன்

## நிக்ஸன் கவலை

வாஷிங்டன், மே 27

அமெரிக்க அதிபர் பதவியை அவசரப்பட்டு ராஜினுமாச் செய்தமையினுல் இன்று தாம் பயனற்ற வாழ்க்கை வாழ்வதாக முன்னுள் அமெரிக்க அதிபர் திரு. நிக்சன் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்குஅளித்த விசேட பேட்டிஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

தம்மீது சுமத்தப்பட்ட வாட்டர்கேட் ஊழல் குற்றச் சாட்டுக்களை எதிர்நோக்கத் தாம் தயாராக இருந்தவேளையில் தமது வழக்கறிஞரின் வற்புறுத்தலின் பேரிலேயே தாம் தமது பதவியை ராஜினுமாச் செய்ததாகவும் அவர் கூறினுர்.

எனக்குப்பின் ஜனுதிபதியாக இருந்த திரு. ஜெரால்ட் போர்ட் எனக்கு மன்னிப்பு வழங்கியது குற்றத்தை நான் ஒப்புக்கொண்டதற்குச் சமமானதாகும் என்றும் திரு. நிக்சன் கூறினுர். [இ]

## பதினெருபேரை உயிரோடு எரித்தனர்

கல்கத்தா மே 27

நிலத்தகராறு காரணமாக 11 பேர் மேற்கு வங்காளத்தில் பத்ராபிந்தி கிராமத்தில் உயிருடன் எரிக்கப்பட்டுள்ளனர்.

கிராமவாசிகள், இவ்வனைவரையும் ஒருவீட்டில்பூட்டி கூரைக்கு மண்எண்ணெய் ஊற்றி எரித்தனர்.

இதில் ஒரு சிறுவனும்சிறுமியும் தப்பியோடமுயன்ற போது சிறுவனை மீண்டும் தீயில் போட்டனர். ஆனுல் சிறுமி தப்பியோடிவிட்டாள். (கெ)

### றொடீஷிய விவகாரம்:

## அமெரிக்க - பிரிட்டன் குழு சாலிஸ்பரியில் சமரசமுயற்சி

சாலிஸ்பரி, மே 27

றொடீஷிய விவகாரம் தொடர்பாக பிரிட்டன்-அமெரிக்க குழு சாலிஸ்பரியில் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

இந்த முதல்சுற்றுப் பேச்சுவார்த்தைகள்பற்றிய அறிக்கைகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

றொடீஷியாவில் பெரும்பான்மை கறுப்பு இனத்தவர்களுக்கும் சிறுபான்மை வெள்ளையர் ஆட்சிக்கும் இடையில் கருத்துவேறுபாடு ஏற்பட்டுள்ளதனையடுத்து அங்கு குழப்பநிலை நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தால் இதனையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜெனிவா சமாதான மாநாடு தோல்வியடைந்து காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (உ)

### இந்திய உள்துறை பாதுகாப்பு

## பிரதமர் தலைமையில் அமைச்சர்கள்குழு நியமனம்

புதுடில்லி, மே 27

பாரதத்தின் உள்துறை, பாதுகாப்புப் பற்றிய முக்கிய விடயங்கள் குறித்து பிரதமர் திரு.மொரார்ஜிதேசாய் தலைமையில் 5 அமைச்சர்கள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஆட்சிமன்ற நடவடிக்கைகள், மாநில சட்டசபை நடவடிக்கைகள்பற்றி அவதானிக்கும் பொருட்டு மற்ருெரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. (உ)

## தி. மு. க.வை ஆதரிக்க முடிவு

சென்னை, மே 27

முன்னுள் சட்டமன்ற உறுப்பினரும் ஜனநாயக காங்கிரஸ் வந்தவாசி தொகுதி சுயேச்சை வேட்பாளர் திரு. வி. இராஜகோபால் போட்டியிலிருந்து விலகி தி. மு. க வை ஆதரிப்பதென முடிவுசெய்துள்ளார்.

'தி. மு கழகத்தில் நான் மீண்டும் சேருவதால், தி. மு. க. வேட்பாளர் திரு. கண்ணப்பனை ஆதரிப்பதற்காக விலகுகிறேன்' என்று குறிப்பிட்டு வாபஸ் பெற்றுள்ளார். [கெ]

## தி. மு. க.வில் சேர்ந்தனர்

சென்னை, மே 2-

தி. மு. கழகப் பொருளாளர் எஸ். ஜே சாதிக்பாட்சா தலைமையில், ஆயிரம் விளக்கு தொகுதியில் ஜனுப் அப்துல் ஷாதருடன் 50 பேர் ஜனதா கட்சியில்இருந்து விலகி தி. மு. க.வில் சேர்ந்தனர். [கெ]

## இந்துமாமன்ற ஆனி உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இந்துமாமன்றம் ஆனி உற்சவத்தைமிகப் பெரிய அளவில் ஜூன் 24ந் திகதி கீரிமலையில் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது. விசேட பஸ்களில் செல்லும் ஆசிரிய, ஆசிரியைகள் காலைப்பூசை, பகற்பூசைகள் செய்வதுடன் அன்னதானமும் வழங்குவர்.

இசைநிகழ்ச்சிகளும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கல்லூரி அதிபர் திரு.வி. கந்தசாமி நிர்வாகத்தில் இந்த விழா நடைபெறும்.

### வைத்தியசாலை ஊழியர்மாநாடு

டோக்கியோ, மே 27

வைத்தியசாலை ஊழியர்களின் சர்வதேச மாநாடொன்று இங்கு ஆரம்பமாகியுள்ளது 56 நாடுகளைச்சேர்ந்த 1,700 நிபுணர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்ளுகின்றனர். ஐந்துநாள் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் பல்வேறு சௌக்கிய-பாதுகாப்பு பிரச்னைகள்பற்றியும், மக்களுக்கான மருத்துவ உதவியை வியாபிதப்படுத்துவதுபற்றிய பிரச்னைகளையும் மாநாட்டுப் பிரதிநிதிகள் ஆராய்வர்.

# ரஷ்யவிமானத்தை கடத்த முயற்சி!

ஸ்டொக்ஹோம், மே27

பதினெட்டு பிரயாணிகளுடன் சென்றுகொண்டிருந்த சோவியத்யூனியன் விமானம் ஒன்றை வழியில் திருப்பிக் கடத்திச்செல்லும் முயற்சியில் இனந்தெரியாதோர்ஈடுபட்டுள்ளனராம்.

இம்முயற்சியை முறியடித்து சுவீடன்மேற்படி விமானத்தை ஸ்டொக்ஹோமுக்கு பாதுகாப்பாகக் கொண்டுவந்து சேர்த்தது என்று ஸ்டொக்ஹோம் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

## "ஏழைகளின் தோழன் கருணுநிதிதான்"

### வணா. சற்குணம்

சென்னை, மே 27

'கிறிஸ்தவர்கள் ஆதரவு எப்போதும் தி.மு.க வை சுற்றியே இருக்கும்' என கிறிஸ்தவ இயக்கத்தின் தலைவரும், நிருபம் ஏட்டின் ஆசிரியருமான இந்திய சுவிசேடத் திருச்சபையின் அகில இந்திய தலைவர் வண. சற்குணம் அறிக்கைவிடுத்துள்ளார்.

தி. மு க. வேட்பாளர் பட்டியலில் கிறிஸ்தவர்கள் இடம் பெருததால்கிறிஸ்தவசமுதாயத்துக்கிடையே அதிருப்திநிலவுவதாக கூறிய பத்திரிகைச்செய்திக்கு இவ்வறிக்கையை வெளியிட்டார்.

'மதுரீதியில், சட்டமன்றத் தேர்தலில் இடம் ஒதுக்கப்பட வேண்டுமென கேட்பாராகில் அது நியாயமல்ல, இயக்கத்திற்கு யார் பாடுபடக் கூடியவனே, கொள்கைதவருதவனே

(6-ம் பக்கம் பார்க்க)

### இஸ்ரேலில்

## லிக்குட் வெற்றியால் சமாதானம் குலையாது

### கார்ட்டர் கருத்து

வாஷிங்டன், மே 27

அரபுப் பகுதிகளிலிருந்துஇஸ்ரேல் வெளியேறவேண்டும் என்ற தமது கருத்தை அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலில் லிக்குட் கட்சி வெற்றிபெற்றதால் சமாதானத்துக்கு ஊறுவிளையும் எனத் தாம் கருதவில்லை என்றும் திரு. கார்ட்டர் கூறியுள்ளார்.

பலஸ்தீனர்களுக்கு தாயகம், யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு, எல்லை நிர்ணயிப்பதில் உத்தரவாதம் என்ற மூன்று அம்சங்கள் அடங்கிய சமரச திட்டத்தையும் திரு.கார்ட்டர் குறிப்பிட்டுள்ளார். (உ)

# திமுக ஆட்சிக்காலத்தைவிட

## ஜனுதிபதி ஆட்சியில் அதிக கொடுமை

### அமைச்சர் இராமச்சந்திரன் கண்டனம்

சென்னை, மே 27

தமிழ்நாட்டில் தி.மு. க.வின் 9 ஆண்டு ஆட்சிக் காலத்தை விட ஜனுதிபதியின் ஓராண்டு ஆட்சிக்காலத்திலேயே அதிக கொடுமை இழைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மத்திய எரிபொருள் அமைச்சர் திரு. பி. இராமச்சந்திரன் சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினுர்.

தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்டு ஜனுதிபதி ஆட்சி அமுல் செய்யப்பட்ட உடன் சட்டசபைத் தேர்தலை நடத்தியிருக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல்விட்டது இந்திய அரசியல் அமைப்புக்கு முரணுனதாகும் என்றும் அவர் கூறினுர். [இ]

### 'பேச்சுவார்த்தைக்கு முன்

## எதிர்க்கட்சித் தலைவர்களை விடுதலை செய்க"

### பாக். அரசிடம் வலியுறுத்து

இஸ்லாமாபாத், மே 27

அரசாங்கத்துடன் அரசியல் நெருக்கடி தொடர்பான சமரச பேச்சுவார்த்தை நடப்பதற்குமுன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் விடுதலைசெய்யப்படவேண்டும் என்றுபாகிஸ்தான் எதிர்க்கட்சிஅணி வலியுறுத்தியுள்ளது.

ஒன்பது . எதிர்க்கட்சிகள் அடங்கிய இந்தஅணி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை.

எனினும் மேற்படிகோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ)

## உல்லாசப் பயண நிறுவனக் கூட்டம்

மட்ரிட், மே 27

உலக உல்லாசப்பயண நிறுவனத்தின் பொதுச்சபைக்கூட்டம் ஸ்பானியா நகரமாகிய தொரிமோலிரேஸில் ஆரம்பமாகியுள்ளது.

இக்கூட்டத்தில் 107 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். அடுத்து வரும் பத்தாண்டுகளுக்கான ஒரு உல்லாசப்பயணத் திட்டத்தையும், 1978-79 காலப்பகுதியில் உ. உ. நிறுவனம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளையும் இக்கூட்டம் வகுத்தளிக்கும்.

## பொறியியல் மாணவர் அடித்துக் கொலை!

சென்னை, மே 27

தீவிர கம்யூனிஸ்டுகளுடன் தொடர்புகொண்டிருந்ததாகக் கருதப்பட்டு பொறியியல் மாணவன் கோழிக்காடு ராஜனை பொலிசார் அடித்துக் கொன்றனராம்! ராஜனைக் கொன்றும்இவரது பிரேதத்தை மறைத்தும் வைத்துக்கொண்டனர் என்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்து கேரள மாநில டி. ஐ. ஜி. ஜெயராம் படிக்கல் உட்பட பல பொலிசார் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டதும் ஜூன் மாதம் 4-ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

கொலைக்குற்றம் செய்தவர்கள் விலங்கிட்டுக்கொண்டு செல்லப்படுவது முறை. இவர்களை விலங்கிட்டே கொண்டு செல்லவேண்டுமென 5000க்கு அதிகமானவர்கள் கூக்குரல் இட்டனர். இவர்கள் காவல் படையின் உயர்அதிகாரிகள் என்றதோரணையில் விலங்கிடுவது அழகல்ல எனப் பொலிசார் கூறியதையடுத்து, இவர்களை கோழிக்காடு சிறைக்கு ஏற்றிச் செல்லவிருந்த வண்டியை மக்கள் கற்களால் தாக்கியசமயம் வாகனம் சேதமடைந்ததுடன் பொலிசார் பலரும் காயமுற்றனர். (கெ)

## மணிவாக்கு

ஓர் இலட்சியத்தைக் கடைப்பிடியாது வாழ்பவன் சுக்கான் இல்லாத கப்பலுக்கு நிகராவான் —மகாத்மாகாந்தி

ஈழநாடு
THE EELANAADU

# தேர்தல்காலச் சிந்தனே!

வெகு நாட்களுக்குப் பிறகு நண்பர்கள் இருவர் சந்தித்துக்கொள்கிறார்கள்.

"கண்டு கன காலமாகி விட்டது. எப்படிச் சுகம்"

இப்படிக் குசலம் விசாரித்துக்கொள்ளும் சம்பிரதாயம் மறைந்துவிட்டது.

"எப்படியப்பா; உங்கள் தொகுதியில் இம்முறை யாருக்கு வெற்றி?"

இந்த முறையில்தான் நண்பர்களுக்கிடையில் இப்போதெல்லாம் சம்பாஷணை ஆரம்பமாகின்றது.

தமிழ்ப் பிரதேச அரசியல் போக்கைப் பற்றிய விஸ்தாரமான விமர்சனத்துடன் நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் யார் அமர்வார்கள் சுதந்திரக்கட்சி மீண்டும் வருமா, —ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாய்ப்புக் கிட்டுமா என்ற ஆய்வுடன் சம்பாஷணை முற்றுப் பெறும்.

நண்பர்கள் சந்தித்துக் கொண்டால் மாத்திரமன்று சாதாரணமாக அறிமுகமானவர்கள் சந்தித்துக் கொண்டாலுங்கூடத் தேர்தல் பற்றியே பேச்சுத் திரும்புகின்றது.

தூரத்துக் கடிதத் தொடர்புகளிலும் கூடத் தேர்தல் பற்றிய விமர்சனங்கள் இடம்பெறாமல் போவதில்லை.

வீடுகளில் சிறு பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை அரசியல் ஆர்வத்துடன் தேர்தலைப் பற்றி ஆராய்கிறார்கள்.

தேர்தல் பிரசாரங்கள் இன்னமும் முனைப்பாக ஆரம்பமாகாத நிலையிலேயே இந்த அளவுக்கு மக்கள் மத்தியில் அரசியல் ஆர்வம் ஏற்பட்டிருக்கின்றது என்றால் அது வரவேற்கத்தக்க ஒன்றுதான்.

ஆனால்..!

மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த ஆர்வம் திசை மாறிப்போய்விடக் கூடாதென்பதே எமது கவலை.

இன்று தமிழ்பேசும் மக்களின் நிலையென்ன? அவர்களின் பிரச்னை என்ன? அவைகளை யாரால், எந்த முறையில் தீர்த்துவைக்க முடியும்?

இந்தக் கேள்விகளுக்கு நம் வாக்காளர்கள் சரியான மறுமொழியைக் கண்டுகொள்வார்களானால் திசை மாறிப்போவது என்பதற்கு இடமேயில்லை.

தேர்தல் என்றதும் திடீர் திடீரென்று புதிய கட்சிகளும், அணிகளும், இயக்கங்களும் தோன்றி மக்கள் மனக்களைக் குழப்புகின்றன.

இவை தேர்தலுக்காக மாத்திரம் முளைக்கும் காளான்களா? இல்லையா? என்பதை ஆராய்ந்து அறிவது வாக்காளரின் கடமை. இக்கடமையை அவர்கள் உணர்ந்தால் குழப்பமுறுவதென்பதற்கு இடமேயில்லை.

# செயற்கைத் தட்டுப்பாடுகள்

எங்கோ ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் என்றால் போதும், உடனே நாடு முழுவதும் தீப்பெட்டிக்குத் தட்டுபாடு!

புகையிலைக் கம்பனியில் வேலைநிறுத்தம் என்றால் போதும் எந்தக் கடையிலும் சிகரெட்டைக் காண முடியாது!

பெற்றோல் கூட்டுத்தாபனத்தில் தொழிலாளர் பிரச்னை என்றால் போதும் எங்குமே மண்ணெண்ணைக்குத் தட்டுப்பாடு வந்துவிடும்!

இது நமது நாட்டில் ஒரு தொற்றுநோய்!

தொழிலாளர் பிரச்னைகளால் சில சமயங்களில் உண்மையாகவே உற்பத்திகள் பாதிக்கப்பட்டுப் பொருட் தட்டுப்பாடுகள் ஏற்படுவது உண்மைதான். ஆனால் இந்தத் தட்டுப்பாடுகள் சுயநலம் கருதும் சமூக விரோதிகளாலேயே பெரும்பாலும் ஏற்படுத்தப்படுகின்றன.

மக்களுக்குப் பணிபுரியும் ஒரு துறையில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற சமூக உணர்வு ஏற்படாதவரை, இந்தச் செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கும் கடைக்காரர்கள் திருந்த மாட்டார்கள்.

பொருட்களைப் பதுக்குவதன் மூலம் செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கும் இவர்கள் தமது இந்தச் செயலால் எத்தனை ஆயிரம் ஏழை மக்கள் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள் என்று சற்றுச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

எதுவானாலும் மக்களுக்கு அத்தியாவசியமாகக் கிடைக்கவேண்டிய பொருட்கள் தொழிலாளர்கள் பிரச்னைகளினால் தட்டுப்பாட்டுக்கு உள்ளாகாத முறையில் நிரந்தர மார்க்கம் ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டியது ஆட்சியில் இருப்போரின் கடமை.

# வவனியாவில்

## த. வி. கூட்டணி எழுச்சி விழா

வவனியா, வெள்ளி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் எழுச்சிவிழா அடுத்த மாதம் 6-ம்திகதி மாலை வவனியா முற்றவெளி மைதானத்தில் மூதறிஞர் செல்வா அரங்கில் நடைபெறவிருக்கிறது.

திரு. ஐ. கேதீஸ்வரன் இவ் விழாவுக்குத் தலைமை தாங்குவார்.

விழாவுக்கு முன் காகர்யனகுளம், சேமமடு, பாலமோட்டை, செட்டிக்குளம் முதலான பல கிராமங்களில் இருந்தும் துவிச்சக்கர உழவு இயந்திர, ஊர்வலங்கள் விழா மைதானத்தை வந்தடையும். (உ)

## 'உண்மையான ஐக்கிய முன்னணி'

பண்டாரகம, வெள்ளி

"உண்மையானதொரு ஐக்கிய இடதுசாரி முன்னணி உதயமானது இந்த ஆண்டில் தான். இதன்மூலம் 1977-ம் ஆண்டு சரியானதொரு கௌரவத்தைப் பெறுகின்றது. கடந்த ஆண்டுகளில் பல கூட்டுமுன்னணிகள், ஒப்பந்தங்கள் எல்லாம் உருவாகின. ஆனல் இவையெல்லாம் ஆட்சியைப் பிடிக்கும் அதிகாரத்தைப் பெறவே தோன்றின. இவ்வருடம் உதயமாகியிருக்கும் ஐக்கிய இடதுசாரி முன்னணியின் உண்மை நோக்கம், இந்த நாட்டில் உண்மையான ஒரு சோஷலிச அரசாங்கத்தை உருவாக்குவதுதான்" என்று பண்டாரகமவில் நடைபெற்ற கூட்டத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசுகையில் கூறினர்.

## இவ்வீதிகள் திருத்தப்படும்

நெல்லியடி, வியாழன்

கட்டைவேலி கிராமசபைப் பகுதிக்குள் உள்ள துன்னலை வெலிக்கந்தை வீதி, அல்வாய் கணக்காதை வீதி, இன்பருட்டி வீதி ஆகியன திருத்தியமைக்க பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் உடுப்பிட்டி, பருத்தித்துறைத் தொகுதிகளுக்குக் கொடுக்கப்பட்டபணத்தில் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது.

## அனைத்துக் கட்சிக் கூட்டம்

சென்னை, மே 26

நடைபெறவிருக்கும் தமிழகச் சட்டப்போவை தேர்தல் பற்றி ஆலோசிப்பதற்காக மாநில ஆளுநர் திரு. பட்வாரி அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தைக் கூட்டி நிலமைபற்றி ஆராய்ந்தார். இதில், தி.மு.க. சார்பில் தலைமைக் கழக செயலாளர் ஆற்காடு வீராசாமி, திரு. ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். (கெ)

## சட்ட ஆலோசனை

சென்னை, மே 27

தமிழக சட்டமன்றத் தேர்தல் முடியும்வரை, கழக வேட்பாளர்களுக்கும் தோழர்களுக்கும் ஆலோசனைகளை வழங்க தி. மு. க. வழக்கறிஞர் திரு. டி. பி. ராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கர்நாடக

## விசாரணைக் கமிஷன்

புதுடில்லி, மே 27

கர்நாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் மற்றும் அவரது அமைச்சர்களுக்கு எதிராக 40 குற்றச்சாட்டுகளை விசாரிக்க மத்தியஅரசு உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ஏ. என். குரோவணக் கொண்ட விசாரணைக்கமிஷனை நியமித்துள்ளது.

40 குற்றச்சாட்டுகளில் தேர்தல் நிதி திட்டும் நோக்கத்தில் சட்டத்திற்கு முரணாக சாராயக்கடை ஏலத்தை முன் வைத்தமை, விஞ்ஞான விளக்க நூல் வாங்க 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியது, ஊழல் ஊழியர்களுக்கு பாதுகாப்பு அளித்தது, சமூகத் துறையில் 30 லட்சம் ரூபா கையாடல், சந்தனசோப் விற்பனவுக்கு அதிக கொமிஷன் வேண்டியது, போக்குவரத்துத் துறையில் மோசடி இப்படி பல குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் கோரியுள்ளது.

இச்கமிஷன் 77-ம் ஆண்டு டிசம்பரில் விசாரணையைத் தொடரும். (கெ)

யாழ்ப்பாணத்தில்

# பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணை விநியோகம்.

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகர பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகள் மூலம, ஒரு பங்கீட்டு அட்டைக்கு 1 போத்தல் வீதம் மண்ணெண்ணெய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எம். எஸ். பேரின்பநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரயில் வகன் மூலம், மண்ணெண்ணை வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், லொறிகள் மூலம் பரல்களில், மண்ணெண்ணை கொண்டுவந்துள்ளதாக அவர் கூறினர்.

1,350 கலன் டீசலும், 675 கலன் மண்ணெண்ணையும் லொறி மூலம் தருவிக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து லொறிகள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் கூறினர். [க-இ]

## கிளிநொச்சியில் கோழிப்பண்ணை நிறுவப்படும்

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சிப்பிரதேச அபிவிருத்திச் சபையின்கீழ் கிளிநொச்சியில் கோழிப்பண்ணை ஒன்று நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நவீன முறையில் இக்கோழிப்பண்ணை அமையும் என்றும் பலலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் இப்பண்ணைக்கு கோழி, குஞ்சுகள் வெளிநாட்டில் இருந்தே வரவழைக்கப்படுமெனவும் கிளிநொச்சி பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. என். சுப்பிரமணியம் நமது நிருபரிடம் தெரிவித்தார். (அ)

## மூலிகைத் தோட்டத்திற்கு காணி

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சிப் பிரதேச அபிவிருத்திச் சபையின் கீழ் அக்கராயன் குளத்தில் ஆயுர்வேத மூலிகைகள் உற்பத்திக்குதலா ஒரு ஏக்கர் காணிமூலம் வழங்கப்படுகின்றது.

இதற்கான காணியை கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். யோகநாதன் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. என். சுப்பிரமணியம் கிராமசேவையாளர் திரு. சாந்தலிங்கம் ஆகியோர் சென்று பார்த்து எல்லை வைத்தனர். (அ)

## இந்து மாமன்ற நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இந்துமாமன்றக்கூட்டம் திரு. வி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். பொறுப்பாளர் எஸ். மகேசன், தலைவர் எஸ். தியாகலிங்கம், உபதலைவர் செல்வி திலகா தர்மலிங்கம், செயலாளர் கா. பஞ்சலிங்கம், உபசெயலாளர் செல்வி சரோஜினி கனகரட்ணம், பொருளாளர் ஜி. தர்மகுலசிங்கம், உபபொருளாளர் செல்வி சாந்தி முத்துலிங்கம்.

## கிளிநொச்சி விவசாயிகள் கஷ்டம்

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி, பரந்தன், பகுதிகளில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணை போன்றன பெரும் தட்டுப்பாடாக உள்ளது.

எரிபொருள் இன்றி குறிப்பாக இப்பகுதி விவசாயிகள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் அனுமதிப்பத்திரம் கோரி மக்கள் படை எடுத்தவண்ணம் இருக்கின்றனர்.

ஒருவருக்கு ஒரு கலன் வீதம் மண்ணெண்ணை வழங்க உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். யோகநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார். (அ)

## ஆயுள் வேத மூலிகைகள் கொள்வனவு

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சித்தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆயுர்வேத மூலிகைகளை கொள்வனவு செய்வதற்கு முன்வந்துள்ளது.

கண்டங்கத்தரி, மாதுளம்பழஓடு, முத்தாமணக்குவேர், சிந்தில்கொடி, கொடிவேலி, நன்னாரிவேர், பெருநெருஞ்சி, சிறுநெருஞ்சி, ஆவரசம்பூ, ஆவரசம்பட்டை, மருதம்பட்டை, அத்திவேர், கோரைக்கிழங்கு, தேன்மெழுகு, ஆகியவற்றை இச்சங்கம் கொள்வனவு செய்யும். ஆமணக்கெண்ணெய், இலுப்பெண்ணெய்' வேப்பெண்ணெய், தேன் முதலானவற்றையும் சங்கம் வாங்கும். (அ)

## சந்துகுத்தி நோய் அபாயம்

கிளிநொச்சி, வெள்ளி

77ம் ஆண்டு சிறுபோக வேளாண்மை கிளிநொச்சிப் பகுதியில் நல்லநிலையில் இருக்கின்ற போதிலும் பல இடங்களில் பயிர்கள் வெள்ளணிலையாய் காட்சிகொடுக்கின்றன.

வெண் சந்துகுத்தி நோய் பரவவிடாது தடுக்கவேண்டும் எனவும் உடனடியாகவிவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களைச் சந்தித்து விவசாயிகள் ஆலோசனைபெற்று தகுந்தமருந்து பாவிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (அ)

எம். ஜி. ஆர். மீது

# கல்யாணசுந்தரம் தாக்கு!

சென்னை, மே 27

"காங்கிரஸ், வலது கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் அ. இ. தி. மு. க. உறவைமுறித்துக்கொண்டது அரசியல் சந்தர்ப்ப வாதமே தவிர வேறொன்றுமல்ல" என வலது கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. கல்யாணசுந்தரம் கூறியுள்ளார்.

"இரண்டு மாதத்தில், திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நிலைமையை மாற்றியதற்கு காரணம், இந்திராகாந்தி பிரதமராக இல்லாததும், காங்கிரஸ் ஆட்சியில் இல்லாததும்தான் காரணம்" என்றுதியாகராஜநகரில், திரு. மூப்பனார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், திரு கல்யாணசுந்தரம் குறிப்பிட்டார். (கெ)

# சமாதானப் பேரணி உருவாக்குவோம்

இமயம் சரிந்தது; இந்து மாக்கடல் வற்றியது; வானம் வெடித்துச் சிதறியது; பூமி அதிர்ந்தது; புவனம் இருண்டது; மனிதகுலம் ஏங்கியது. இதயங்கள் நின்றன. முப்பெருந்தலைவர்கள், முதுபெருமறிஞர்கள், தமிழ்பேசுமினத்தை வாழ்விக்க ஒன்றிணைந்தநேரத்தே அடுத்தடுத்து அமரத்துவமெய்தியதால் ஏற்பட்ட நிலைதான் இது.

பிரிந்துநின்று போராடுவதை நிறுத்தி, தமிழ்பேசுமினம் ஒன்றுபட்டுப் போராடுவதன் மூலமே விடுதலை பெறலாம்; அதன் முன்னோடியாகத் தலைவர்களாய யாம் ஒன்றுபடவேண்டுமென்ற பரந்த இதயத்துடன் தலைவர்கள் ஒன்றுபட்டனர். தமிழ்பேசுமினம் அணிதிரண்டது; புதிய எழுச்சி தோன்றியது; ஒரே அணி; ஒரேகொடி; ஒரேகொள்கை; தமிழ்ஈழமே லட்சியம் என்பதை அசில உலகுமறியக்குரல் கொடுத்தனர்.

தங்கள் வாழ்வையே விடுதலைக்கு ஈருவாக்கி. முதுபெரும் தலைவர்களையிழந்து தவித்துக்கொண்டிருக்கும் கூட்டணித் தலைவர்களின்கீழ்க் கட்டுப்பாடாக இயங்கி எமது விடுதலைப் பாதையைத் தொடர்வோமென மக்கள் திரண்டுநிற்குமிவ்வேளையில், எமக்கேற்பட்ட தும்பியத் காலங்களிலோ, ஆட்சியாளர்களின் அடக்குமுறைப்போதோ பொலிஸாரின் அட்டூழியங்களின்போதோ எங்கிருந்தனரோ? என்செய்தனரோ? தேர்தலென்றதும் மக்களைப் பிரித்து, அவர்களைநிறுத்து விற்பனைசெய்யும்இலட்சியத்துடன் தோன்றியுள்ள தேர்தற்காலத்தியாகிகளையும், தலைவர்களையுமறியாத முன்னணிகளையும், முதிர்ந்த நிலையிலும் மோகந்தணியாத கழகங்களையும் எம்மத்தியிற் காண்கிறேம்.

மறைந்த தலைவர்கள் முப்பதாண்டுகளாக எழுப்பிய விடுதலைக்குரல், இன்றுதான் சிங்கள அரசியல்வாதிகள் செவிகளிலும், உலக அரசியல் அரங்குகளிலும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ் ஈழக் கொள்கையை அடிப்படையாக வைத்து எதிர்வரும் தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலைச் சிங்கள அரசியலாளரும். உலக அரசியல் அவதானிகளும் கூர்ந்துநோக்கும் இவ்வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் போட்டியின்றித் தேசியபேரவைக்குச் செல்லவேண்டும். அச்சூழ்நிலை ஏற்பட்டபோது சாதகமான வேட்பாளராவது போட்டியின்றித் தெரிவுசெய்யப்படுவது இலங்கை அரசியலாளரை மட்டுமின்றி உலக அரசியல் அரங்குகளையே ஒரு திருப்புமுனைக்கு ஆக்கிவிடும்.

இத்துணை முக்கியம் வாய்ந்த தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் போட்டியின்றிச் செல்வதன் மூலம் தமிழ்த்தேசியஇனத்தின் விடுதலை உணர்வை உலகறியச் செய்வதே தங்கடமையென்பதை எண்ணி போட்டிக்குத் தயாராகும் எதிரணி வேட்பாளர் ஒதுங்கி நிற்பதே மக்களுக்கு அவர்கள் செய்யும் மகாதியாகமாகும்.

தமிழ்பேசுமின விடுதலைக்காக, பல கட்சிகளிலுமிருந்து தொண்டாற்றி அடுத்தடுத்து மறைந்த தலைவர்களை நினைந்து இன்னுயிர்ந்த இளைஞர்களை நினைந்து, சித்திரவதைப்பட்ட இளஞ் சந்ததியை நினைந்து, வசதியாக வாழக்கூடிய பச்சைப் பாலகர்கள் விடுதலை உணர்வினுல் உண்ணஉணவோ உடுக்க உடையோ இன்றிக் கண்ணுக்கெட்டாத இடங்களில் அமைதியற்றுத் திரிவதை நினைந்து, தரப்படுத்தலால் தரைமட்டமாகிய மாணவக் குலத்தை நினைந்து, ஆட்சியாளராலும், முப்படைகளாலும், சிங்களப் பொதுமக்களாலும் மக்கள் அடைந்த இரத்த வரலாறுகள், கண்ணீர்க் காவியங்கள், கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், எரியூட்டல்கள் முதலியனவற்றை நினைந்து மொழி, நில, மத உரிமைகள் சிதறடிக்கப்பட்டுத் தமிழ்த் தேசிய இனம் அடிமைகளாக்கப்பட்டதை நினைந்து கூட்டணி வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட முனைவோர் ஒதுங்குதல் பண்புடைமையாகும்.

இத்தனைக்கும் மேலாகத் தத்தம் மனச் சாட்சியைச் சித்திரவதை செய்துவிட்டு, இலட்சியம், ஜனநாயகம், கொள்கை அடிப்படை என்ற போர்வைகளுட் பதுங்கி நின்று சுய இச்சையைப் பூர்த்திசெய்ய முனையும் எட்டப்ப வேட்பாளர்களை தடுத்து நிறுத்தவேண்டிய கடமை. ஒவ்வோர் தொகுதிகளிலும் உள்ள மூதறிஞர் கடனுகும்.

தொகுதிகளிலுள்ள மதகுருமார், ஆசிரியர்கள், சட்ட மேதைகள், கிராம முன்னேற்ற சனசமூக நிலையத் தலைவர்கள், பெரியோர்கள் முதலியோர் சேர்ந்து 'சமாதானப் பேரணி' ஒன்றை அமைத்து அப்பேரணி மூலம் எதிரணி வேட்பாளரைத் தடுத்து நிறுத்தும் சமாதானப் பெரும் பணியை மேற்கொள்வதால் விடுதலையை நோக்கிச் செல்லும் இனம் எத்தனையோ தேவையற்ற துன்பங்களிலிருந்து தவற வழிபிறப்பது மட்டுமல்ல எதிர்பாராத நன்மைகள் பல ஏற்படும்.

காந்தியடிகள், இந்திய அடிமை நிலையை மக்களுக்கு எடுத்துக்கூறினர். மக்கள் அணி திரண்டனர். இந்திய சுதந்திரத்தைக் காந்தியடிகள் பெற்றுக்கொடுத்தார்.

அறிஞர் அண்ணு தமிழ்மக்களை விளித்து, உலகில் ஏழரைக்கோடி தமிழர் வாழ்கின்றேம், ஆனுல் உலகப் படத்தில் தமிழர் நாடு கிடையாதென்றூர். மக்களைச் சிந்திக்க வைத்தார். தமிழர் அணி திரண்டனர். உலக வரைபடத்தில் தமிழ்நாட்டைப் பொறிக்கவைத்தார்.

எமது தலைவர்கள் மக்களை விளித்து ஒற்றுமை மூலமே விடுதலை என்றனர். மக்கள் ஓரணியாயினர். ஆனுல் முதுபெருந் தலைவர்கள் அடுக்கடுக்காக மறைந்தனர். மறைந்த மாமேதைகளின் லட்சியத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி நிறைவேற்றுவதன் காலோளாகத் தொகுதிப் பெரியார்கள் போட்டித் தவிர்ப்பினை ஏற்படுத்துவார்களாக.

வித்துவான்

—வ. கந்தையா

# தமிழ் ஈழம் கனவு அல்ல

இன்று உலகத்திலே நிலப்பரப்பில் சிறிய நாடுகளும், ஜனத்தொகையில் குறைந்த இனங்களுக்கும் சுதந்திரத்துடன் தன்னிறைவு பெற்றுத் தலை நிமிர்ந்துவாழும்பொழுது உலக நாகரிகங்களுக்கெல்லாம் [illegible] நாகரிகம் கொண்ட தமிழன், பெரிய நிலப்பரப்பைக் கொண்ட தமிழன் 6 கோடி ஜனத்தொகையைக் கொண்ட தமிழன், ஏன் அடிமையாக ஆதரவற்றவனுக அனுதையாக எடுப்பார் கைப்பிள்ளையாக உலக மன்றங்களிலே நிரந்தரமாகத்தன் குரலை ஒலிக்க முடியாதவனுக ஏன் வாழவேண்டும்?

இன்று ஒவ்வொரு மானமுள்ள தமிழனின் உள்ளங்களிலும் எழும் கேள்வி இது தான்?

இந்தக் கேள்வியின் முடிவு தான் தமிகத்திலே அண்ணு தலைமையில் ஆரம்பமான தி. மு காவும், இலங்கையில் தந்தை செல்வா தலைமையில் ஆரம்பமான தமிழர் கூட்டணி முன்னணியும் என்பது தமிழ் மக்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும்.

தமிழனுக்குத் தனியரசு வேண்டும். இன்று உலகிலே ஆறு கோடி தமிழனும் பரந்து செறிந்து வாழ்ந்தாலும் இந்தியா, இலங்கை, மலேஷியா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா, அந்தமான், பிறித் தீவுகள், பர்மா, இவைகளே தமிழனின் முக்கிய நாடுகளாகும்.

இவற்றுள் கூடுதலான தமிழர் வாழும் நாடு இந்தியா. பலமாநிலங்களைக் கொண்ட இந்தியாவிலே தமிழர் ஒருதனி அரசை நிறுவ முடியாது. மத்தியில் கூட்டாட்சியும், மாநிலத்தில் சுயாட்சியும் தான் அங்கே தமிழருக்குக் கிடைக்கும் உரிமையாகும். பிரிந்து செல்லும் பிரதேச சுயாட்சி மூலமோ மாநிலச் சுயாட்சி மூலமே ஒரு இனம் தன்னுடைய உரிமை அத்தனையையும் பாதுகாக்க முடியும். மலேசியாவிலும், சிங்கப்பூரிலும், அந்தமானிலும், பிஜித் தீவுகளிலும் தமிழன் ஓரளவு உரிமையுடனும், தன்மானத்துடனும் வாழ்கிறுன்.

ஆனுல் எல்லா நாடுகளையும் விட மோசமாகத் தமிழன், அடிமையாக்கப்பட்டதும் ஒதுக்கப்பட்டதும் இலங்கையில்தான் என்பதை இன்று உலகநாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

'சிங்கை நகரம்' அன்றையத் தமிழனின் சிறப்பு மிக்க நகரமாக விளங்கியது. இன்றைய வல்லிபுர ஆழ்வார் கோவிலடிதான் அன்றைய சிங்கை நகரம் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் இங்கே செந்தமிழ்க் கொடிபறந்தது. தமிழர் மன்னர்கள் இங்கிருந்து தமிழ் ஈழத்தைச் செம்மையுடன் ஆண்டார்கள் (சுவாமிஞானப் பிரகாசர், திரு. குலசபாநாதன் ஆகியோரின் குறிப்புகளில் இதனை அறியலாம்)

எல்லாளன் 40 வருடங்கள் அனுராதபுரத்திலிருந்து (வீஜிதபுரா) தமிழ் ஈழத்தை ஆட்சி செய்தான். நல்லூரைத் தலைநகரமாகக் கொண்டு தமிழ் ஈழத்தை பரராஜசேகரன் செகராஜசேகன் பரம்பரையினர் பல நூற்றுண்டுகளாக ஆண்டனர். இவர்களில் கடைசி மன்னனுகிய சங்கிலியன் 48 ஆண்டுகள் தமிழ் ஈழத்தை ஆண்டு கடைசியாகப் போத்துக்கீசருடன் சண்டை செய்து தூக்கு மரத்தில் வீரமரண மெய்திய வரலாறு உண்டு இப்படி ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் ஈழம் என்று இருந்ததை ஆராய்ச்சி நூல்களும், சரித்திரங்களும் நிரூபிக்கின்றன. இப்படியாக ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலம் வரை தமிழன் தன்மானத்துடனும் சுதந்திரத்துடனும் வாழ்ந்தான்.

1948-ம் ஆண்டுமாசிமாதம் 4-ம் திகதி இந்த நாட்டுத் தமிழர்களுக்கு அடிமை விலங்கு பூட்டப்பட்டது. தேசியக் கொடியில் தமிழர்கள், முஸ்லிம்களின் உரிமை பறிக்கப்பட்டது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம், தமிழ் ஈழத்தின் நில உரிமை பறிக்கப்பட்டது. 7 பாராளுமன்ற உறுப்பினர்களை அனுப்பிக்கொண்டிருந்த 10 லட்சம் இலங்கை இந்தியர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. 1956-ம் ஆண்டு நிறைவேற்றிய தனிச் சிங்களச் சட்டத்தால் மொழி உரிமை அரசாங்க உத்தியோகங்கள் யாவும் பறிக்கப்பட்டன.

இதன்பின்னர் தமிழ்மக்களைத் திருப்திப்படுத்துவதற்கென ஏற்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம் தமிழ் மொழி விசேஷ ஷரத்துக்கள், சமரசப் பேச்சுவார்த்தைகள் என்று பலவாருகத் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டார்கள். கடைசியாகச் சிங்களத்தலைவர்களால் திட்டமிட்டு இயற்றப்பட்ட குடியரசுச் சட்டத்தின்மூலம் முற்றுமுழுதாக இந்தநாட்டுத் தமிழன் அடிமையாக்கப்பட்டான். இந்த நாட்டிலுள்ள 35 லட்சம் தமிழ்மக்களையும் முற்றுமுழுதான பௌத்த சிங்களத் தலைவர்களாகமாற்றுவதுதான் சிங்களத் தலைவர்களின் திட்டமாகும். இதன் பின்னர் தமிழ்த்தலைவர்கள் யாபேரும் தாங்கள் கடைப்பிடித்த சமஷ்டி, பிரதேச சுயாட்சி, மாவட்ட சபைகள், ஒற்றைஆட்சியில் உரிமையுடன் வாழ்வு, சமஅந்தஸ்து யாவற்றையும் கைவிட்டுத் தமிழ் ஈழக் கோரிக்கையை ஏகமனதாக தமிழர் விடுதலை கூட்டணிக்குக்கீழ் நிறைவேற்றிப்பிரகடனப் படுத்திஞர்கள்.

## விவாதமேடை

### தமிழ்ஈழம் பெறும்வழி

35 லட்சம் தமிழ்மக்களுக்கும், ஒரேகட்சி ஒரேகொள்கை ஒரு கொடி ஒரு தலைவர் சட்ட மறுப்பு உட்பட இடைவிடாத அகிம்சைப் போராட்டம். இவற்றின் மூலம் 10 ஆண்டுகளில் தமிழ்ஈழத்தை மலரவைக்கமுடியும். மு. ஏரம்பமூர்த்தி கூறியதுபோல் வெளிநாடுகளின் ஆயுத உதவியோ வேறெந்த உதவியோ தேவைப்படாது என்பதை உணரவேண்டும்.

### பொருளாதாரம்

#### நெல்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் விளையும் நெல் தமிழ் ஈழத்திற்குக் கண்டு மிகுதி வெளிநாடுகளுக்கும் அனுப்பலாம். வன்னி வளநாடும் கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆற்றுப்பள்ளத்தாக்குகளும் நெல்விளைவில் தன்னிறைவு காணுமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதேபோல் உபஉணவுப் பொருட்களும் இந்த இரண்டு மாகாணங்களிலும் போதிய அளவு உற்பத்தி செய்யலாம்.

#### தென்னை கரும்பு

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருக்கும் தென்னை கரும்பின் மூலம் தேவையைப் பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல் வெளிநாட்டுச் செலவாணியையும் சம்பாதிக்கலாம்.

#### கடல் வளம்

கடல்வளம் கொண்டது தமிழ் ஈழம், மீன், உப்பு, முத்து முதலானவற்றின் மூலம் தமிழ் மக்கள் தன்னிறை காணலாம் வெளிநாடுகளுக்கும் அனுப்பலாம்.

#### கைத்தொழில்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை, புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன்இராசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனைகடதாசித் தொழிற்சாலை, கந்தளாய் சீனித்தொழிற்சாலை இவற்றின் மூலம் கைத்தொழிலை வளப்படுத்தலாம். வல்லிபுரக் கோவிலடியில் ஒரு கண்ணடித் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம்.

#### துறைமுகங்கள்

உலகத்திலே சிறந்த இயற்கைத் துறைமுகமாகிய திருகோணமலைத்துறைமுகம்தமிழ் ஈழத்தில் உண்டு. இத்துறைமுகத்தைத் தமிழ் ஈழத்தின் விடுதலைக்கும், துறைமுகத்திற்கும் பாவிக்கலாம். காங்கேசன் துறைத் துறைமுகத்தை வட பகுதியின் பெரிய துறைமுகமாக்கி ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றுக்குப் பாவிக்கலாம்.

#### தமிழ் ஈழமும் முஸ்லிம்மக்களும்

ஈழத்தமிழ்த்தாயின் இரு புதல்வர்கள்தான் தமிழரும் முஸ்லிம்களும் தமிழன்அடிமையானுல் இந்த நாட்டு முஸ்லிம்களும் அடிமைதான். என்ன கஷ்டம் தமிழருக்கு நேருகிறதோ அதே கஷ்டம் முஸ்லிம்களுக்கும் நேரும். ஆகையால் தமிழரும் முஸ்லிம்களும் தோளோடு தோள் நின்று போராடித் தமிழ்ஈழத்தை மலரவைக்கவேண்டும்.

—உடுப்பிட்டியூர்

சிவலிங்கம்

## வேலரும் மயிலரும்




வேலர்: பிள்ளை பிறந்து ஏழு மாசமாச்சு. இப்பதான் எங்க அயல்வீட்டுத் திருமதி, பிள்ளை பிறந்தது பார்க்க வந்தவ.

மயிலர்: புருஷன் தேர்தலில் நிற்கிருரோ!

— சுந்தர்.

# இணுவில் பொலிஸ் இரட்டைக்கொலை:

# 'றிமாண்டில் வைத்து வாக்குமூலம் நீதிமன்றம் அனுமதியளிக்கும்''

## பொலிஸாருக்கு நீதிபதி அறிவுரை

யாழ்ப்பாணம், சனி

''சந்தேகத்தின் பேரில்கைது செய்யப்படும் நபர்கள் எவரையும் பொலிசார் 24 மணித்தியாலயங்களுக்குமேல் பொலிஸ் நிலையத்தில் வைத்திருக்கக் கூடாது. சந்தேக நபர்களை என்முன் ஆஜர் செய்தால் அவர்களை றிமாண்டில்வைத்து றிமாண்டில் இருந்து சந்தேக நபர்களிடம் பொலிசார் வாக்கு மூலம் பெற நீதிமன்றம் அனுமதிவழங்கும்''

இவ்வாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசுறட்ணம் பொலிசாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இணுவில் பொலிஸ் இரட்டைக்கொலை தொடர்பான மனு ஒன்றின்போது நீதிமன்றத்தில் வைத்து பொலிசாருக்கு நீதிபதி மேற்கண்டவாறு கூறினர்.

### சட்டத்தரணி தாக்கல்செய்த மனு

மேற்படி இரட்டைக்கொலை தொடர்பாக சம்பவ தினத்தன்று கொலை நடந்த இடத்திற்கு சமீபமாகவுள்ள கடை ஒன்றின் உரிமையாளரும், அவரது மைத்துனரும், கடைச்சிப்பந்தியும் பொலிசாரால் விசாரணையின்பொருட்டு கூட்டிச் செல்லப்பட்டதாகவும் அன்றிலிருந்து அவர்கள் பற்றிய சுகவலே இல்லையென்றும் அவர்களைச் சந்திக்க குடும்பத்தவரால் முடியவில்லையென்றும் பொலிசாரை அழைத்து நிரபராதிகளான அவர்களை விடுவிக்க வேண்டுமென்றும் கோரி மேற்படி கடைக்காரரின் சகோதரர் சார்பில் சட்டத்தரணி திரு.கே. குணரத்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் மனு ஒன்றினைத் தாக்கல் செய்திருந்ததும் இதனையடுத்து காங்கேசன்துறை பொலிஸ் அதிகாரியை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி அறிவித்திருந்ததும் ''ஈழநாடு'' வாசகர்கள் அறிந்ததே.

இவ்வறிவித்தலையடுத்து காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. ஆரியரத்னநீதிபதிமுன் ஆஜரானர்.

### பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்து விட்டோம்

பிரஸ்தாப நபர்கள் மூவரையும் தாம் விசாரணைக்குட்படுத்திவிட்டு 24 மணித்தியாலயங்களுக்குள்ளாகவே பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்து விட்டதாகவும் தெரிவித்து அவர் அதற்கு ஆதாரமாக பிரஸ்தாப நபர்களின்கையெழுத்துக்கொண்ட பிணைப்பத்திரங்களையும் நீதிபதி முன்சமர்ப்பித்தார்.

இவ்வேளையே பொலிசாருக்கு நீதிபதி மேற்படி அறிவுறுத்தலை வழங்கினர். (உ)

# ''பாகுபாடின்றி நாட்டை ஆளுவோம்''

## கண்டியில் ஜே. ஆர்

கண்டி, வெள்ளி

''ஐக்கியதேசியக் கட்சி வெற்றியீட்டி ஆட்சிக்கு வந்ததும், நான் ஓர் இனத்தின் பிரதமராகமட்டும் இருக்க மாட்டேன். சகல மக்களினது அபிலாஷைகளையும் நிறைவேற்றும் இந்த நாட்டின் பிரதமராகவே இருப்பேன். எந்தவிதமான பாரபட்சமும் பாகுபாடும் காட்டாமல் எல்லாமக்களையும் சமத்துவமாக மதித்து, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரதமராக நான் கடமையாற்றுவேன்'' என்று போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற ஐ. தே. கட்சியின் தேர்தல் பிரச்சார ஆரம்பக் கூட்டத்தில் பேசுகையில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினர்.

''ஒருவனின் உயர்வு அவனின் பிறப்பைக் கொண்டோ அல்லது அவனது மூதாதையரைக் கொண்டோ பார்ப்பதில்லை. அவனது நடத்தை, அவன் பழகும் முறை, கடைப்பிடிக்கும் கொள்கை ஆகியவற்றைக் கொண்டே கணிக்கப்படுகிறது. இதற்கமையவே உயர் பதவிகளில் உள்ளவர்கள், அமைச்சர்கள் நடக்க வேண்டும். திரு. கொப்பேகடுவ நினைப்பதுபோல நான் எனது மூதாதையரைப் பற்றி நினைப்பதில்லை. அதிகாரம் என்பது, தனிப்பட்ட ஒருவருக்கோ அல்லது குழுவுக்கோ சொந்தமானதல்ல. அதிகாரம் இன்று மக்கள் கையில் தான் இருக்கிறது'' என்று திரு.ஜே. ஆர். கூறினர்.

# பிள்ளைபிடி காரர்? பெற்ருேர் கவலை

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டியில் பிள்ளை பிடிகாரர் உலாவுவதால் இப்பகுதிப் பெற்ருேர் மத்தியில் பெரும் பீதி தோன்றியுள்ளது.

கரவெட்டியைச் சேர்ந்த சிறுவனொருவன் பிள்ளைபிடிப்போரால் கடந்தப்பட்டுத் தெய்வாதீனமாகத் தப்பியோடி வந்ததைத்தொடர்ந்து பெற்ருேர் தமதுபிள்ளைகளை வீதிகளில் நடமாட விடாது பாதுகாப்பில் கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

கரவெட்டி மேற்கு கன்பொல்லையைச் சேர்ந்த பொ. ரகுநாதன் என்னும் 14-வயதுச் சிறுவனே பிள்ளைபிடிகாரரிடம் தப்பியவராவார்.

பிரஸ்தாப சிறுவன் நெல்லியடியில் ரியூஷனுக்குச் சென்று விட்டு இரவு 7-மணியளவில் வீடுதிரும்புகையில் தனியார் ஜீப்வாகனமொன்றில் வந்த நால்வர் சிறுவனை ஜீப்பில் ஏறும்படியும் அவனை வீட்டுக்குக் கொண்டு போய் விடுவதாகவும் கூறிச் சிறுவனை ஏமாற்றிப் பலவந்தமாக ஜீப்பில் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணப்பாதையால் சென்றனராம்.

அந்தஜீப்வண்டி அச்சுவேலியில் நிறுத்தப்பட்டு அந்த வண்டியிலிருந்தவர்கள் மது வருந்துகையில் சிறுவன் ஜீப்பை விட்டுக் குதித்துத் தப்பி யோடவே பிள்ளைபிடிகாரர்கள் சிறுவனைத் துரத்திச் சென்றனராம் அப்போது அப்பாதையில் பஸ் வண்டியொன்று வரவே சிறுவன் பஸ்வண்டியை மறித்து அதில் ஏறவே பிள்ளைபிடிகாரர் திரும்பி ஓட்டம் பிடித்தனராம். விடயம் அறிந்த பஸ்பிரயாணிகள் சிறுவனைக் காப்பாற்றி வீட்டிற்குக் கொண்டு சென்று பெற்ருேரிடம் ஒப்படைத்தனர் என்று கூறப்பட்டது.

## சமாதான நீதவான்



உடுவில்தொகுதி சிறிலங்கா சுதந்திரக்கட்சி பொதுச்சபை உறுப்பினரும், ஏழாலைப்பகுதி 6-ம் வட்டார அமைப்பாளருமான திரு. ஐ. சின்னத்தம்பி அருச்சுனன் யாழ்ப்பாண நீதி நிருவாகப்பகுதிக்கான சமாதான நீதவானுக நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நல்லூர் அரசினர் நெசவு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் பழைய மாணவரும், அ. இ. சி. த. மகாசபையின் பொதுநிர்வாக சபை, ஏழாலை தெற்கு மேற்கு கிராம அபிவிருத்திச் சபையின் நிர்வாக சபை, ஏழாலை விவசாய பயிர்ச் செய்கைக் குழு, ஏழாலை இணக்கசபை ஆகியவற்றின் பிரதம உறுப்பினராகவும் கடமையாற்றும் இவர் சிறந்த சமூகசேவையாளருமாமாவார். (ஈ)

## ஏழைகளின்—

( 3ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைப்பீடத்துக்குக் கட்டுப்பட்டவனே அவனுக்கே இடம் ஒதுக்கவேண்டும். இதை விடுத்து இடம் ஒதுக்கென்று கேட்பது நியாயமில்லை. அறிஞர் அண்ணா, திரு. காமராஜர் அவர்களின் பின் ஏழைகளின் தோழனாக இருப்பவர் கலைஞர் திரு.மு. கருணாநிதியே' என்று கூறியுள்ளார். (கக)

## மூதறிஞர் நினைவாக...

அரியாலை, வெள்ளி

அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் அந்தியேட்டியை முன்னிட்டு சுண்டிக்குளிப் பகுதியைச் சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களாலும், இளைஞர் பேரவை உறுப்பினர்களாலும் சுண்டிக்குளி பஸ்தியாம்பிள்ளைச் சந்தியில் பால்கஞ்சி வழங்கப்பட்டது.

பெருந்திரளான மக்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். இவ்வைபவத்தில் கூட்டணி வேட்பாளர்களான திருவாளர்கள் யோகேஸ்வரன், வி.தர்மலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ)

## சுதந்திரக்கட்சி தேர்தல் பிரச்சாரம்

கண்டி, வெள்ளி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஜூன் மாதம் மூன்றும் திகதி கண்டியில் நடைபெறும். அன்றுகாலை பிரதமர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அபேட்சகர்களைச் சந்திப்பார். இதனைத் தொடர்ந்து தலதா மாளிகாவின் விசேஷ பூசை நடைபெறும். பின்னர் ஊர்வலமும் கூட்டமும் போகம்பரை மைதானத்தில் இடம்பெறும்.

## வேலையில்லாப் பிரச்னை உக்கிரமடைகிறது

பாரிஸ், மே 27

உலகின் பலநாடுகளில் படித்தவர்கள் மத்தியில் வேலையில்லாப்பிரச்னை உக்கிரமடைந்து வருகின்றது. இங்கு தேசிய மாணவர் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களின் பிரகாரம், இன்று பிரான்சில் உயர் கல்வியுடன் கூடிய 120,000 பேர் வேலைவாய்ப்பின்றியுள்ளனர்.

மட்ரிட் சஞ்சிகையான கம்பியோ வெளியிடும் புள்ளிவிபரங்களின்படி 24 வயதுக்குக் குறைந்த படித்த இளைஞர்கள் 382,000 பேர்கள் வேலைவாய்ப்பின்றி அவதிப்படுகின்றனர். இவர்களது நாட்டினது வேலை செய்யக்கூடியவர்கள் தொகையில் 8.6 சத விதத்தினராவர்.

புருஸல்ஸ் தேசிய தொழிலிணைப்புச்சபையினது அறிக்கைகளின்படி பெல்ஜியத்தில் 252,000 பேர் வேலையில்லாப் பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## உற்சவம்

தோண்டாவில், வெள்ளி

தோண்டாவில் வடக்கு சிவகாமி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 23-ந் திகதி ஆரம்பமாகியுள்ளது. 30-ந் திகதி பிற்பகல் வேட்டைத்திருவிழாவும், இரவு சப்பரத்திருவிழாவும், 31-ந் திகதி வைகாசிவிசாகத்தன்று காலை ரதோற்சவமும், அடுத்த மாதம் 1-ந் திகதி புதன்கிழமை பௌர்ணமி தினத்தன்று தீர்த்தோற்சவமும், 2-ந் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

0 0 0

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த நவநாட் திருவிழா அடுத்த மாதம் 4ம் திகதி ஆரம்பமாகி 13-ம் திகதி முடிவடையும். இறுதி நாளன்று பிற்பகல் அன்னதானம் வழங்கப்படும்.

## நைஜீரியா செல்கிருர்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டியைச் சேர்ந்த திரு.வி இராஜேந்திரம் இம்மாத இறுதியில் நைஜீரியா பயணமாகின்ருர். இவர் முன்னர் சென்னை மெட்டல் பொக்ஸ் கம்பனியில் தொழிற்சாலை முகாமையாளராகப் பணிபுரிந்தவர் இக் கம்பனியின் நைஜீரியாக் கிளையில் பணிபுரிவதற்காகவே இவர் நைஜீரியாவிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

......

## மெய்வல்லுநர் போட்டி

பண்டத்தரிப்பு, வெள்ளி

வலி.தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டுபோட்டிகள் ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும். பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு கி. கோபாலரத்தினம் கலந்து கொள்வார்.

## இன்று

யாழ்ப்பாணம், சனி

தொல்புரம் மத்தி கொட்டடிப் பதிவாழ் ஆதி முத்துமாரி அம்பாளுக்கு இன்று விசேஷ அபிஷேக ஆராதனைகளும்பூசையும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சிகள் சிவநெறி கதிர் சிவசுப்பிரமணியக் குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் திரு. கா. சின்னத்துரை, திரு. ந. சிவசண்முகமூர்த்தி ஆகியோரின் சிறப்புரையும் செல்வி லலிதாம்பிகை முருகையாவின் இன்னிசைக் கச்சேரியும், மூ. மயில்வாகனத்தின் ... நடனக்குழுவைச்சேர்ந்த குழந்தைகளின் நடனக்காவடி ஆட்டமும் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும்.

## குருமார் சபை கோரிக்கை

ஆனைக்கோட்டை, வெள்ளி

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த ... தோட்டத்து இளைஞன் சிவனு இலட்சுமணனது மரணம் குறித்து விசாரணையை மேற்கொள்ளுமாறு தேசிய மதகுருமார் சபையினர் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை மகஜர் மூலம் கோரியுள்ளனர். (உ)

## மூதறிஞரின் உருவப்படத் திரைநீக்கம்

ஆனைக்கோட்டை, வெள்ளி

மூதறிஞர்செல்வநாயகத்தின் உருவப்படத் திரைநீக்கம் நாளை மாலை பலாலிதெற்கு சென் ஜேம்ஸ் வீதிச் சுருகாமையில் நடைபெறும். திரு. ஆ. ஆரோக்கியநாதர் இது தொடர்பான நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பர். கோப்பாய் மாஜி எம். பி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை உருப்படத்தை திரைநீக்கம் செய்து உரையாற்றுவார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிப்பிரமுகர்களும் உரையாற்றுவர். (உ)

## நாளை பரிசளிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ் மாவட்ட கூட்டுறவு அதிகாரசபையினால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற சங்கங்களுக்கான பரிசில்கள் இம்மாதம் 29-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபாலாவினால் வழங்கப்படவுள்ளது. (கு-இ)

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார் — லதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

REGAL Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
(JAFFNA)
3-rd CROWDED WEEK
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

இதயம் கனியாகும்
116-வது வெற்றித் தினம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் ஜெமினி — சரோஜாதேவி
(யாழ்ப்பாணம்) நாகேஷ் — விஜயநிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
பணமா பாசமா

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15 & 9.45
RUSSIAN ROULETTE
மர்மக் கதைகளுக்கே முடியாய் விளங்குவது. 007 பாணியில் துப்பாக்கியோடு சுற்றிச் சுழன்று திரிகிறான் ஜோஜ் சேகால்.
மத சுதந்திரம் கொடு-அண்டைநாடுகளை அடிமைப் படுத்தாதே-என்னும் சுதந்திரவாதிகளின் கம்யூனிஸ எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் ருஷ்ய உளவாளிகளுக்கும் நடக்கும் போராட்டம்.
மர்மம் - விறுவிறுப்பு - அதிர்ச்சிமிக்க சம்பவங்கள் நிறைந்தது.
Thrilling - Exciting - Demanding
(சில நாட்களுக்கு மட்டும்)

## நாளை கூடுவர்

யாழ்ப்பாணம், சனி

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் தர்மபரிபாலன சபையின் 42வது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை நடைபெறவிருக்கிறது. (செ)

......

## சத்ய சாயி சேவா ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், சனி

கொக்குவில் - கோண்டாவில் பகவான் ஸ்ரீ சத்ய சேவா பஜனை மண்டலி பத்தாவது ஆண்டு விழா இன்று மாலை கொக்குவில் கிழக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

நாடகங்கள், நடனங்கள், சொற்பொழிவுகளுடன் அஷ்டோத்திரமும், பூஜையும், பாபா பஜனையும் இடம் பெறும்.

வற்றாப்பளை

## அம்மன்கோவில் உற்சவம்

நெல்லியடி, வெள்ளி

இம்மாதம் 30-ந் திகதி நடைபெறும் சரித்திரப்பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவத்தையொட்டி யாத்திரிகர்களின் நலன் கருதி பல இடங்களிலும் தாகசாந்தி, அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாங்குளத்தையடுத்துள்ள தச்சடம்பன், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் இவ்வேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வுற்சவத்தையொட்டி பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவும் பருத்தித்துறையிலிருந்து வற்றாப்பளைக்கு விசேட பஸ் சேவையை நடத்தத் தீர்மானித்துள்ளது.

வற்றாப்பளை உற்சவத்திற்கு இ. போ. ச. பஸ்கள் 24 மணி நேரமும் சேவையிலீடுபடுத்தப்படவுள்ளன.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் — தேவிகா
ஆனந்தஜோதி

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
பணக்காரக் குடும்பம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினி-அஞ்சலிதேவி
வீரக்கனல்

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்) விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈட்ஸ்மன் கலர்)

"திருவருள்" புரியும் பக்திரசமான 4-வது வாரம்
தினசரி 4 காட்சிகள் ஏ.வி.எம்.ராஜன், கிருபானந்தவாரியார்
ராஜா (யாழ்நகர்) போன்: 7180 நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின் திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு: பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்குசெய்துகொள்ளலாம்.

# யாழ். நீதிமன்றம் —

(1-பக்கத் தொடர்ச்சி)

ந்து கூறியதாவது: இவ் வழக்கு இன்னும் ஆரம்பக்கட்டத்திலேயே இருக்கிறது. விசாரணை நிலைக்கு வந்தபின்னரே அதனை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றலாம் என்பதுதான் என சமர்ப்பணம். விசாரணை ஆரம்பமான பின்தான் அந்த முடிவுக்குவரலாம்.

இன்று இப்படியாக ஒரு தீர்ப்பை வழங்க முடியாது. விசாரணை ஆரம்பமான பின்னரே அதுபற்றி முடிவை தெரிவிக்கலாம்.

நீதிபதி: எதிரிகளை மீண்டும் ஒரு தடவை என் முன்னிலையில் கூப்பிடவேண்டும் எனக் கூறுகிறீர்களா?

சிவா: ஆம் அதன்பின்னர்தான் விசாரணை ஆரம்பமானதாக கருதமுடியும்.

நீதிபதி: குற்றப் பத்திரிகை கொடுத்ததும் விசாரணையின் ஒரு பகுதியாகும்.

சிவா: இருந்தும் விசாரணை ஆரம்பமாகிவிட்டதாக கருத முடியாது. குற்றப்பத்திரிகைகளுக்கும் எதிரிகள் பதில் சொன்ன பின்னரே விசாரணை ஆரம்பமாகும். எதிரிகள் பிணையில் விடவேண்டும் என்பது என் இரண்டாவது சமர்ப்பணமாகும்.

இதைத் தொடர்ந்து 2-ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். தம்பிமுத்துரை தமது வாதங்களை நிகழ்த்தினர்.

### வி. என். வாதம்

சட்டத்தரணி வி. என். நவரத்தினம்: குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டு அதற்கு பதிலிறுக்கப்பட்ட பின்புதான் விசாரணை ஆரம்பமாகும். இந்த நிலையில் விசாரணை மாற்றத்தை ஏற்றுக் கொள்ளக்கூடாது.

சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாய: நீதவான் நீதிமன்றத்திலும், மாவட்ட நீதிமன்றத்திலும், இப்படியான குற்றவியல் வழக்குகள் எடுக்கப்படும்போது குற்றப் பத்திரிகை வாசித்து எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பின்புதான் விசாரணை ஆரம்பமாகும் என்பது பற்றிய கருத்து மிகத் தெளிவாக இருக்கின்றது. அதே கருத்தைத்தான் இங்கு நாங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும். எனவே அதன்பிரகாரம் எதிரிகளுக்கு குற்றப்பத்திரிகை வாசித்து அதனை ஒப்புக் கொள்ளுமிடத்து விசாரணை ஆரம்பமாகும்.

சட்டத்தரணி எஸ். கதிரவேலுப்பிள்ளை நீதி, நிர்வாக சட்டத்தின் 192 (1) அ. ஆ. பிரிவில் நடவடிக்கை எடுத்த பின்பு 204-ம் பிரிவின் பிரகாரம் குற்றப்பத்திரிகை வாசித்து அதன்பின்புதான் 192 (1) இ யின் பிரகாரம் ஒரு விசாரணை திகதியை நிர்ணயிக்கலாம். 204-ம் ஷரத்தின்படி நடவடிக்கை எடுக்குமுன்பு அப்படியான விசாரணை திகதியை நிர்ணயிக்க முடியாது எனவேதான் இப்போ இருக்கும் மனு ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது.

### மோதிலால் நேரு வாதம்

சட்டத்தரணி எம். மோதிலால்நேரு கூறியதாவது: இது நீதிபதி விசாரணை செய்யும் வழக்கல்ல. ஜூரிசபைமுன் விசாரணைசெய்யும் வழக்காகும். ஜூரிசபையினர் வழக்கை பொறுப்பேற்ற பின்னர்தான் வழக்கு விசாரணை ஆரம்பமானதாக கருதமுடியும். அதற்குமுன் நடப்பதெல்லாம் ஆரம்ப விசாரணையாகவே இருக்கும். ஆதலால் ஜூரி சபையினர் எதிரிகளைப் பொறுப்பேற்று குற்றவாளிகளா- சுற்றவாளிகளா என்று அறிந்தபின்னரேவிசாரணையை மாற்றமுடியும்.

அரச சிரேஷ்ட சட்டத்தரணி திலக்மாரப்பனே துரையப்பா கொலை தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸ் அதிபர் பீ. வி. டபிள்யு. சில்வாவின் சத்தியக்கடுதாசி ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, அது பற்றி விளக்கம் அளிக்க முயற்சித்தபோது, சட்டத்தரணி எம் சிவசிதம்பரம் அதற்கு ஆட்சேபம்தெரிவித்தார்.

### சத்தியக்கடுதாசி எம்மைப்பாதிக்கும்

இது ஒரு கொலைவழக்கென்றும், ஜூரி சபையினர் முன் விசாரணை செய்யப்படவிருக்கும் வழக்கென்றும், ஆதலால் பொலிஸ்அதிபரின் சத்தியக் கடதாசியிலுள்ள விஷயங்களை பகிரங்கமாகக்கூறுவதால் அது தம்மைப் பாதிக்குமென்றும் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் தெரிவித்தார்

பொலிஸ்அதிபரின் சத்தியக் கடுதாசியை சமர்ப்பித்தஅரச சட்டத்தரணி மாரப்பனே எதிரிகள் வேறுகுற்றத்தைப் புரியலாமென ஊகிக்கக்கூடியதாக இருப்பதால் அவர்களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி கேட்டுக்கொண்டார்

அரச சிரேஷ்ட சட்டத்தரணி மாரப்பனே தொடர்ந்துகூறியதாவது: மன்புஎதிரிகள் ட்ரயல் அட்பார் விசாரணையின்போது அவசரகாலச் சட்டத்தின் கீழ் விளக்க மறியலில் இருந்தார்கள்

### 45நாட்கள் ரிமாண்டில் வைக்கலாம்

இவர்கள் நீதிநிர்வாகச்சட்டத்தின்படி யாழ். மேல் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறார்கள். ஆகையால் நீதிநிர்வாகச் சட்டத்தின்படி இன்றிலிருந்து 45 நாட்கள்வரை ரிமாண்டில் வைத்திருக்கலாம். அதன்பின் கூட தகுந்த காரணங்களுக்காக விளக்கமறியலில் வைத்திருக்கலாம். ஆதலால் எதிரிகளை விளக்கமறியலில் வைக்கும்படிகேட்டுக்கொள்கிறேன்.

சட்டத்தரணி எம். சிவசிதம்பரம்: அவசரகாலச்சட்டம் முடிந்தபின்னரும் இந்த எதிரிகள் சிறையில் வைக்கப் பட்டிருந்தனர். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த மற்றவர்கள் அவசரகாலச்சட்டம் முடிந்தபின் விடுதலைசெய்யப் பட்டனர்,

அரச சட்டத்தரணி: 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றத்தில் இந்த எதிரிகள் மீது விசாரணை நடந்துகொண்டிருந்தது.

சட்டத்தரணி சிவா: இவ் வழக்கில் எதிரிகளுக்கு எவ்வித அறிவித்தலும் வழங்கப்படாமல், அவர்கள் இன்று வந்திருக்கிறார்கள்.

சிரேஷ்ட சட்டத்தரணி: உயர்நீதிமன்றத்தில், பகிரங்க வழக்குத் தொடுநர் இந்த எதிரிகளை யாழ். நீதிமன்றத்தில் இன்று ஆஜராகவேண்டும் என்று நீதியரசரின்கவனத்துக்கு கொண்டுவந்து அங்கு எதிரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

சிவா: எதிரிகள் எவ்வித அறிவித்தலும் கட்டளையும் ஆணையுமின்றி தாமாகவே இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறார்கள்.

நீதிபதி: பத்திரிகைகள் கூறுகிறதே.

சிவா: பத்திரிகையில் பலதும் வரும். எதிரிகளை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (க)

• • •

## இன்று

யாழ்ப்பாணம், சனி

பருத்தித்துறை வியாபாரிமூலை கலைமணி சனசமூக நிலையம்-விக்னேஸ்வரா படிப்பகம் 28-வது வருடாந்தமகாசபைத் தினம் இன்று இரவு வியாபாரிமூலை சித்திவிநாயகராலயமுன்றலில் நிலையத்தலைவர் திரு ஆ. மகாதேவன்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

(இமையாணன்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. (இ)

ஈழநாடு
The EELANADU

## 5 இளைஞர்கள்—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நாதன் ஆகியோர் ஆஜரானார்கள்.

3-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஏ. அமிர்தலிங்கம் சட்டத்தரணி கே. துரைரத்தினம், சட்டத்தரணி வி. இரத்தினசிங்கம், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஆஜரானார்கள்.

4-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி ஜே. விஸ்வநாதன், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

5-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜே. விஸ்வநாதன், சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயா சட்டத்தரணி ஜே. விஸ்வநாதன், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஆஜரானார்கள்.

ராசா, சட்டத்தரணி ஜே. விஸ்வநாதன் ஆகியோர் ஆஜரானார்கள்.

சட்டப்பிரச்னைகள் பற்றி விவாதங்கள் சமர்ப்பணங்கள் யாவும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றது. விசாரணை முடிவில் நீதிபதி தமிழில் தமது தீர்ப்பை தெரிவித்தார்.

நீதிபதி தீர்ப்பில் தெரிவித்ததாவது: கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஜுன் மாதம் 14ம் தேதி எதிரிகள் ஆஜராகவேண்டும். அதுவரை ஒவ்வொரு திங்கட்கிழமையும் எதிரிகள் இந்த நீதிமன்றத்திற்கு வந்து பதிவாளரை சந்திக்கவேண்டும். எதிரிகள் வரத்தவறினால் பொலிசார் வந்து கைது செய்வார்கள்.

வெகுகாலம் றிமாண்டிலிருந்த காரணத்தினால் அனுதாபப்பட்டு எதிரிகளைப் பிணையில் செல்ல அனுமதிக்கிறேன். 31ந் தேதி செவ்வாய்க்கிழமை வந்து 5,000 ரூபா பிணை செலுத்தவேண்டும். பிணைக்காரரையும் கூட்டிவரவேண்டும்.

# வங்கிக் கொள்ளை:

## இருவருக்கும் ரூ.2,000 பிணை

அரச தரப்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி திலக் மாரப்பனே அரசசட்டத்தரணி பி. சிவலோகநாதன், அரசசட்டத்தரணி கே. ஜெயக்குமார் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார்.

### குற்றப்பத்திரிகை

(1) 74 ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கும் 75-ம் ஆண்டு ஜுலை மாதம் 27-ம் திகதிக்கும் உட்பட்ட காலத்திற்குள், யாழ்ப்பாணத்தில் எதிரிகள் ஏனையோருடன் சேர்ந்து அல்பிரட் துரையப்பாவைக் கொலை செய்யும் குற்றத்தை புரிய அல்லது அக்குற்றத்திற்கு உடந்தையாயிருக்கும் பொது நோக்கைகொண்டு, அல்லது அந்த நோக்கத்திற்காக ஒன்றுகினீர்கள் அல்லது உடந்தையாக இருந்தீர்கள், அல்லது அக்குற்றத்தை புரிந்தீர்கள். மேலும் அச்சூழ்ச்சியினால் அக்குற்றம் உண்மையில் நிறைவேற்றப்பட்டது.

(2) 75 ஜுலை 27-ம் திகதி அல்லது அதற்குமுன் பின்னுள்ள காலங்களில் இந்நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பொன்னாலையில், மேலே குறிப்பிட்ட 1-ம் எதிரி ஏனையோருடன் சேர்ந்து துரையப்பாவைக் கொலைசெய்துள்ளீர்.

(3) 1வது குற்ற பகர்வில் குறிப்பிட்ட நேரத்திலும் 2ம், 3ம் 4ம், 5ம் எதிரிகளாகிய நீவிர், 2வது குற்றப்பகர்வில் குறிப்பிட்டுள்ள குற்றத்திற்கு உடந்தையாக இருந்தீர்கள். அதன் பெறுபேறாக குற்றம் புரியப்பட்டது.

### 119 சாட்சிகள்

இவ்வழக்கில் 119 சாட்சிகளின் பெயர்ப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, அத்துடன் 35 காண்பிக்கப்படும் பொருட்களின்பட்டியலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### கொள்ளை வழக்கு

இன்பம் கொள்ளை வழக்கும் நேற்று நீதிமன்றத்தில் கூப்பிடப்பட்டது. இவ்வழக்கில் துரைசிங்கம் பரமேஸ்வரன் விஸ்வசோதி இரத்தினம் (இன்பம்) ஆகியோர், வங்கி மனேஜரிடம் கொள்ளையடித்ததுடன், கார் ஒன்றையும் கொள்ளையடித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் 1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எம். மோதிலால் நேரு, சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் ஆகியோர் ஆஜரானார்கள். 2-ம் எதிரிசார்பில் சட்டத்தரணி கே. வி. பி. வரத

இங்கு விசாரணைசெய்யுமாறு உயர் நீதிமன்றத்திற்கு மனுச்செய்து உயர் நீதிமன்றம் மீண்டும் அனுப்பிவைத்தால் இங்கு விசாரணைசெய்யலாம்.

கொழும்பு மேல் நீதிமன்றம் சென்ற பின் இந்த நீதிமன்றம் வந்து பதிவாளரைச் சந்திக்கத் தேவையில்லை

இக்கட்டத்தில் எதிரிகளிடம் தமிழ்பேசும் ஜுரர்கள் வேண்டுமா? சிங்களம் பேசும் ஜுரிகள் வேண்டுமா? என்று கேட்டபோது ஐவரும் தமிழ் பேசும் ஜுரிகள் வேண்டும் எனத் தெரிவித்தனர்.

நீதிபதி: இந்த முடிவை மாற்றி ஜுரிகளை மாற்றமுடியாது. எதிரிகளுக்கு அரசாங்கச் செலவில் வழக்கறிஞர்களை நியமிப்பது வழக்கம். கொழும்பு மேல் நீதிமன்றத்தில் உங்களுக்கு அரசாங்கச் செலவில் வழக்கறிஞர்களை நியமிப்பார்கள். 30ந் திகதி காலை இந்த நீதிமன்றத்திற்கு வந்து பதிவாளரைச் சந்திக்க வேண்டும்.

கொள்ளை வழக்கு எதிரிகள் இருவருக்கும் இதே நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி தெரிவித்தார்.

இச்சமயம் சட்டத்தரணி எம். மோதிலால் நேரு கொள்ளை வழக்கில் கைதான 1ம் எதிரி விசாரணையின் பின் விடப்பட்டதாகவும் இது ஒரு கொள்ளை வழக்காக இருப்பதாகவும் நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். இதைத் தொடர்ந்து நீதிபதி கொள்ளை வழக்கு எதிரிகளைத் தலா 2,000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து ஜுன் மாதம் 14ந் தேதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

கொள்ளை வழக்கு எதிரிகளுக்குக் குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டுத் தமிழ பேசும் ஜுரிகளா, சிங்களம் பேசும் ஜுரிகளா வேண்டும்? எனத் தனித்தனியே கேட்டபோது தமிழ்பேசும் ஜுரிகள் வேண்டுமெனத் தெரிவித்தனர்.

எதிரிகளாகிய தமிழ் இளைஞர்கள் 7 பேரும் நீதிமன்றத்திற்கு வெளியில் வந்ததும் அங்கு திரண்டு நின்ற இளைஞர்கள் அவர்களை வரவேற்று வெடி கொளுத்தி மகிழ்ச்சி தெரிவித்தனர். அதன் பின் அவர்கள் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்துடன் சென்று தந்தை செல்வாவின் சமாதிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்கள். (சு)

## ஊழியர் வேலைநிறுத்தம் ரயில்சேவை ஸ்தம்பிதம்

கொழும்பு, வெள்ளி

இரத்மலானை, மாளிகாவத்தை, மருதானை, தெமட்டகொடை ரயில்வே ஓட்டசாலைகளின் (றன்னிங் செட்) ஊழியர்கள் நேற்று திடீரென வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளதை அடுத்து கொழும்பில் ரயில்சேவை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது.

நேற்று பிற்பகல் 2-30 மணிக்குப்பின் கொழும்பிலிருந்து எந்த ரயிலும் புறப்படவில்லை என்று நமது நிருபர் தெரிவித்தார்.

75 ரூபா சம்பளஉயர்வு வாழ்க்கைச்செலவுப்புள்ளி படி அதிகரிப்பு உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தனர்.

நேற்று மாலை போக்குவரத்து அமைச்சர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் 75 ரூபா சம்பள உயர்வைஉடன் வழங்குவதாக உறுதியளித்தபோதிலும் மிகுதி கோரிக்கைகள் காரணமாக தமது வேலைநிறுத்தத்தை கைவிட ஊழியர்கள் மறுத்துவிட்டனர்.

### காங்கேசனிலிருந்து...

காங்கேசன்துறையிலிருந்து நேற்று பகல் கடுகதி, மாலை தபால்வண்டி உட்பட சகல ரயில்களும் கொழும்புக்குச் சென்றதாகவும் கொழும்பிலிருந்து பகல் 11-55க்கு புறப்பட்ட உத்தரதேவி இரவுஉரிய நேரம் வந்து சேர்ந்ததாகவும் யாழ். ரயில்வே பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-இ)

## ஒல்லாந்து பணய விவகாரம் சிறுவர்கள் விடுதலை

லண்டன், மே.27

தென் மலாக்காவைச் சேர்ந்த ஆயுதந்தாங்கிய மலாக்காவாசிகள் தாம் கடந்த திங்கட்கிழமைமுதல் பணயமாக வைத்திருந்த பாடசாலைச் சிறுவர்கள் அனைவரையும் விடுதலை செய்துள்ளனர்.

இதேவேளை இவர்கள் 50க்கும் அதிகமானோரைக் கொண்ட ரயில் ஒன்றையும் 5 ஆசிரியர்களையும் தொடர்ந்தும் பணயம் வைத்துள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட சிறுவர்களுக்கு வயிற்று நோய் கண்டிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)

## சத்தியத்தில்நம்பிக்கைவைத்து இலட்சியப் பயணம்செய்தவர்

யாழ்ப்பாணம், சனி

'ஈழத் தமிழினம் செய்திட்ட தவப்பயனாக வந்துதித்த செல்வா; இஸ்லாமியன், கிறிஸ்தவன், கத்தோலிக்கன் என்று மதபேதம் பேசி மாரடித்த தமிழினத்தை மதபேதங்களை அகற்றி முதலில் மொழி பின்னர் மதம் என்ற கருத்தை விதைத்தவர்' என்று பிரம்மஸ்ரீ ஜெயராமக்குருக்கள் செல்வா அஞ்சலிக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். இக்கூட்டம் ஊர்காவற்றுறை சன சமூக நிலையத்தில் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் நடந்தது.

வணக்கத்துக்குரிய, அல்போன்ஸ் சேவியர் உரையாற்றுகையில், தந்தை செல்வா நமக்கெல்லாம் தெம்பூட்டி, துணிச்சலுடன் வீரமூட்டி, நம்மை அரசியலுக்கு அடியெடுக்கவைத்தவர். இதனாலே அவரது மறைவுகேட்டு மூழுத்தமிழகமே கண்ணீர் சிந்தியது அவரது இலட்சியத்துக்காகப் பாடுபடுவதே நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும் என்றார்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் உரையாற்றுகையில், 'நான் தந்தையின் அன்புப் பிணைப்பில் சிக்குண்டவன். இன விடுதலைக்காக, இன்பத் தமிழ்மொழிக்காக, அடிபடுவதும், சிறைப்படுவதும் பெருமைக்குரிய விடயங்கள் என தியாகங்களின் மூலம் நிலைநாட்டியவர் தந்தை. இவர் ஒரு பிரபல்யமான வழக்குரைஞராக இருந்தும், சட்டத்தைமீறி சிறை சென்ற தியாகி, அவரை

(2-ம் பக்கம் பார்க்க)

## நிருபர்கள் கூட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு உட்பட்ட சகல 'ஈழநாடு' நிருபர்களினது முக்கிய கூட்டம் ஒன்று 29-5-77பிற்பகல் 3 மணிக்கு ஈழநாடு காரியாலயத்தில் நடைபெறும். சகல நிருபர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர். (ஆ-ர்)

## "தனிப்பட்ட விருப்பு வெறுப்பு வேண்டாம்"

— அமிர்

யாழ்ப்பாணம், சனி

"ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் இருக்கலாம். ஆனால் அது நமது ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு தடையாய் இருக்கக் கூடாது."

இவ்வாறு கோண்டாவில் கிழக்கு சந்திக்கருகாமையில் திரு. பொ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற தந்தை செல்வாவின் [illegible] சலிக்கூட்டத்தில் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறினர்.

திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில், '1945 ம் ஆண்டு தொடக்கம் இறுதிக்காலம் வரைக்கும் தந்தை செல்வாவின் பணிகளை வேறு எந்தத் தலைவரும் செய்ததில்லை. கட்சி மாற்றுக்காரர்களையும் ஐந்தகக்காரர்களையும் ஒரே திசைக்கு இழுத்துச் சென்றவர் தந்தை செல்வா. அவர் எவ்வாறு ஒற்றுமைப்படுத்தி கூட்டணி என்ற பெயரில் கட்டிக்காத்தார். அந்த ஒற்றுமையை, அந்தக் கூட்டணிக்கொள்கைகளை காப்பாற்றுவதே நமது கடமையாகும். எனது நல்லூர்த் தொகுதிக்கு திரு. மு. சிவசிதம்பரத்தை நியமிக்கும்படி நானே அமிர்தலிங்கத்திற்கு இரண்டு வருடத்திற்கு முன்பே கூறிவிட்டேன்.

யாழ். மாநகரசபையில்

## மேலும் பல ஊழியர் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், சனி

நிரந்தர தினசரி சம்பள விகித அடிப்படையில் மேலும் பல ஊழியர்கள் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த ஏற்பாடு ஜுன் 1-ம் திகதி முதல் அமுலுக்கு வரும் யாழ். மாநகரவிசேஷ கமிஷன் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

உள்ளூராட்சி அமைச்சரை இதுவிஷயமாக தாம் பேட்டி கண்டதின்பேரில் அளிக்கப்பட்ட, அங்கீகாரத்தின்படி மேற்படி நடவடிக்கையைத் தாம் எடுத்துள்ளதாக விசேஷ ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

விசேஷ ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசப் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நிரந்தர தினசரி சம்பள அடிப்படையில் மொத்தம் 244 பேரும், நிரந்தர மாதச் சம்பள அடிப்படையில் 94பேரும் நியமனம் பெறுகிறார்கள். இவர்களுக்கு வேறுபல அனுகூலங்களும் கிடைக்கும். நிரந்தர மாதச்சம்பள அடிப்படையில் 7 லைன்ஸ் மன்கள் சேவையில் அமர்த்தப்படுகிறார்கள்.

இவர்களுக்கு நியமனப்பத்திரங்கள் மேற்கூறிய அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

இந்தத் தொழிலாளர்களின் பிரச்னைகள் பல வருடங்களாகத் தீர்க்கப்படாமல் இருந்து வந்துள்ளன. மாநகர ஆணையாளர் திரு. கே. சிவஞானம் மற்றும் காரியாலய அதிகாரிகளின் ஒத்துழைப்பின் காரணமாக இத்தொழிலாளர்களின் பிரச்னைகளை விரிவாக ஆராய்ந்து உள்ளூராட்சி அமைச்சு சுற்று நிருபத்துக்கமைய அவர்களின் சேவை நிலைமைகளை சரிசெய்யவும் முடிந்தது.

உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளூராட்சி அத்தியட்சகர். மற்றும் தொழிற்சங்கங்கள் யாழ். மாநகர ஊழியர்கள் ஆகியோர் அளித்த ஒத்துழைப்புக்காக விசேஷ ஆணையாளர் நன்றி தெரிவித்துள்ளார்.

## நாளை 'ஈழநாடு' வாரமலரில்

விவசாயிகளுக்குப் பெரும்பிரச்னையாயிருந்து வரும் வெங்காயத்தண்டு கோதியையும் மிளகாய் இலை அரிபுளுவையும் எப்படி அழிப்பது?

யாழ். லயன்ஸ் கழக விவசாயக்குழுத் தலைவர் திரு. எஸ். பத்மநாபன் இது பற்றி நாளை 'ஈழநாடு' வாரமலரில் விளக்கமாக எழுதுகிறார். படிக்கத் தவறாதீர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் வைன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 28 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna; Telegrams Eelanaadu Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.